# ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதைப் பற்றிய கொள்கைக் கையேடு




கொள்கை வகுப்பாளர்களுக்கும், செயல்படுத்துபவர்களுக்குமான ஓர் அறிமுகக் கையேடு

The Bali Process

ஆள்கடத்தல் வியாபாரம், மக்களைக் கடத்துதல் மற்றும் அது தொடர்பான நாடு கடந்த குற்றம் பற்றிய பாலி செயல்முறை (பாலி செயல்முறை) 2002-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது ஒரு தன்னிச்சையான மற்றும் பிணைப்பு எதுவும் இல்லாத மண்டல ஆலோசனைச் செயல்முறையாகும். இது ஆஸ்திரேலிய மற்றும் இந்தோனேசிய அரசுகளின் இணைத்தலைமையுடன், 45 உறுப்பினர் நாடுகள் மற்றும் அமைப்புகளுடன் உள்ளது.

இந்த கொள்கைக் கையேட்டைப் பற்றிய கேள்விகளை பாலி செயல்முறையின் மண்டல சார்பு அலுவலகத்துக்கு (RSO) பின்வரும் முகவரியில் அனுப்ப வேண்டும்:

மின்னஞ்சல்: info@rso.baliprocess.net RSO இணையதளம்:
http://www.baliprocess.net/regional-support-office

2015 மே மாதம் பிரசுரிக்கப்பட்டது.

# ஒப்புரை

இந்த கொள்கைக் கையேடானது பாலி செயல்முறை உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டு, மண்டல ஆதரவு அலுவலத்தினால் ஆதரவளிக்கப்பட்டு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட பாலி செயல்முறை கொள்கைக் கையேடுகள் வரைவுக்குழுவினால் வழிநடத்தப்படுகிறது:

**லாலு முகமது இக்பால் (Lalu Muhamad Iqbal),**
இந்தோனேசிய குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட நிறுவனங்களின் நடப்பு இயக்குநர், வெளிவிவகார அமைச்சகம், இந்தோனேசியா (இணைத் தலைமை)

---

**ஜோனதன் மார்டன்ஸ் (Jonathan Martens),**
புலம்பெயர்ந்தோர் உதவிப் பிரிவின் தலைவர், ஆசிய-பசிபிக் மண்டல அலுவலகம், புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (இணைத் தலைமை)

---

**மேகன் சால்மர்ஸ் (Megan Chalmers),**
மூத்த சட்ட அதிகாரி,
மக்களுக்கு எதிரான குற்றங்களுக்கான பிரிவு,
அட்டார்னி ஜெனரல் திணைக்களம், ஆஸ்திரேலியா

---

**முகமது ஷிஃபான் (Mohamed Shifan),**
உதவி தலைமை குடிவரவு அதிகாரி, குடிவரவு மற்றும் குடிஅகல்வு திணைக்களம், மாலத்தீவு

---

**ராபர்ட் லார்கா (Robert Larga),**
உரிமம் மற்றும் ஒழுங்குமுறைக்கான இயக்குநர்,
பிலிப்பைன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிர்வாகம்,
பிலிப்பைன்ஸ்

---

**பின்திப் லீலாகிரியங்சாக் ஸ்ரிஸனிட் (Pinthip Leelakriangsak Srisanit),**
அரசு வழக்கறிஞர்,
சர்வதேச விவகாரத்துறை,
அட்டார்னி ஜெனரல் அலுவலகம்,தாய்லாந்து

---

வரைவுக் குழுவுக்குக் கூடுதல் ஆதரவு தருவது:
**டிம் ஹோ (Tim Howe),**
புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM)
செயல்திட்ட ஒருங்கிணைப்பாளர், மண்டல ஆதரவு அலுவலகம்


The Bali Process

# முன்னுரை

2002-இல் இது தொடங்கப்பட்ட நாள்முதல், ஆள்கடத்தல் வியாபாரம், மக்களைக் கடத்துதல் மற்றும் அது தொடர்பான நாடு கடந்த குற்றம் பற்றிய பாலி செயல்முறையானது (பாலி செயல்முறை) ஆள்கடத்தல் வியாபாரம், மக்களைக் கடத்துதல் மற்றும் அது தொடர்பான நாடு கடந்த குற்றத்தின் பின்விளைவுகளைப் பற்றிய பிராந்திய விழிப்புணர்வைத் திறம்பட எழுப்பியுள்ளது. அத்துடன் அதன் பிரதிபலிப்பாக உத்திகளையும், செய்முறை ஒத்துழைப்பையும் உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது. 48 உறுப்பு நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் அத்துடன் பல பார்வையாளர் நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் இந்த தன்னார்வக் கருத்துக்களத்தில் பங்கேற்கின்றன.

ஆர்வமுள்ள உறுப்பினர்களின் ஆலோசனையுடன், பாலி செயல்முறையின் மண்டல ஆதரவு அலுவலகத்தால் (RSO) உருவாக்கப்பட்ட, கடத்தப்பட்ட நபர்களை அடையாளம் காண்பதிலும், பாதுகாப்பதிலும் உள்ள பிரச்சினைகள் பற்றிய கொள்கைக் கையேடுகளின் தொகுப்பை பாலி செயல்முறையின் எட்டாவது தற்காலிகக் கூட்டத்தில் மூத்த அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளார்கள். இதே வழியில் மேலும், கொள்கைக் கையேடுகளை வரைவு செய்ய, இந்தோனேசியக் குடியரசு மற்றும் புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM) துணைத்தலைமை ஏற்றுள்ள வரைவுக்குழுவை மண்டல ஆதரவு அலுவலகம் (RSO) ஏற்படுத்தியுள்ளது. இந்த வரைவுக்குழுவில் இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, மாலத்தீவு, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் புலம்பெயர்வுக்கான பன்னாட்டுக் கழகம் (IOM) சார்ந்த வல்லுநர்கள் அடங்கியுள்ளார்கள்.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி கொள்கை பகுப்பாளர்கள் மற்றும் செயல்படுத்துபவர்களுக்கு உதவும் வகையில் சிறிய அறிமுகக் கையேடுகளைத் தயாரிக்கும் நோக்கத்துடன் அந்தக் குழு ஆறுமாத காலத்தில் நான்கு முறை கூடியுள்ளது. கையேடுகளின் வரைவுப் பதிப்புகள் பாலி செயல்முறை உறுப்பினர்களுக்கும் மற்றும் பார்வையாளர்களுக்கும் கருத்துக்களை எழுத்துவடிவில் வழங்குவதற்காகச் சுற்றுக்கு விடப்பட்டு, அதன்பின் தாய்லாந்தில் உள்ள பாங்காங்கில் மார்ச் 23 முதல் 24 வரை நடைபெற்ற பாலி செயல்முறையின் முழு கலந்தாய்வுப் பட்டறையில் விவாதிக்கப்பட்டு, மறுஆய்வு செய்யப்பட்டது. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணவும், பாதுகாக்கவும் கொள்கை வகுப்பாளர்களுக்கும், செயல்படுத்துபவர்ளுக்கும் உதவும் வகையில் கொள்கைக் கையேடுகள் பயனுள்ள ஆதாரமாய் இருந்தன என்று அதில் பங்குபெற்றோர் ஒப்புக்கொண்டனர். உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களுக்கு இணங்க, வரைவுக்குழு வரைவுகளைத் திருத்தி, முக்கிய மாற்றங்களையும் மற்றும் பரிந்துரைகளையும் இணைத்தது.

பாலி செயல்முறை உறுப்பு நாடுகளில் இருந்து நல்ல நடைமுறைகளை உதாரணங்களைப் பெருமளவில் எடுத்துக்கொண்டு ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றில் சர்வதேச மற்றும் பிராந்திய தரத்துக்கான கண்ணோட்டத்தை வழங்குவதை கொள்கைக் கையேடுகள் இலக்காகக் கொண்டுள்ளன. 2013 ஏப்ரலில் நடைபெற்ற ஐந்தாவது உயர்மட்டக் கூட்டத்தின் பரிந்துரைக்கு இணங்க, இத்தகைய கொள்கைக் கையேடுகள், பாலி செயல்முறையின் கருப்பொருள் பகுதிகளையும் மற்றும் பாலி செயல்முறை உறுப்பினர்களின் குறிப்பிட்ட அக்கறை காட்டும் பிரச்சினைகளையும் கொண்டுள்ள பாலி செயல்முறை கொள்கை கையேடுகளின் இரண்டாம் தொகுதியாகும். அவை தன்னிச்சையானவை மற்றும் பிணைப்பு எதுவும் இல்லாதவை. அத்துடன் பாலி செயல்முறை உறுப்பினர் நாடுகளிலுள்ள பல்வேறு உள்நாட்டு நிறுவனங்களால் குறிப்பு சாதனங்களாகப் பயன்படுத்தும் நோக்கம் கொண்டவை.


லிசா க்ராஃபோர்டு
**(Lisa Crawford)**
மண்டல ஆதரவு அலுவலக (RSO)
இணை மேலாளர் (ஆஸ்திரேலியா)

பெபெப் ஏ. கே. என். ஜின்ஜினன்
**(Bebeb A.K.N. Djundjunan)**
மண்டல ஆதரவு அலுவலக (RSO)
இணை மேலாளர் (இந்தோனேசியா)


REGIONAL SUPPORT OFFICE
THE BALI PROCESS

# தலைப்பெழுத்துச் சொற்கள் மற்றும் சுருக்கப்பெயர்கள்

| | |
|---|---|
| ASEAN | தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு |
| Bali Process | ஆள்கடத்தல் வியாபாரம், மக்களைக் கடத்துதல் மற்றும் அது தொடர்பான நாடு கடந்த குற்றம் பற்றிய பாலி செயல்முறை |
| ILO | பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு |
| IOM | புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு |
| MOU | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| NGO | அரசு சாரா அமைப்பு |
| Organized Crime Convention | ஒழுங்கமைக்கப்பட்ட நாடுகடந்த குற்றத்துக்கு எதிரான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் |
| RSO | பாலி செயல்முறையின் மண்டல ஆதரவு அலுவலகம் |
| Trafficking in Persons Protocol | ஒழுங்கமைக்கப்பட்ட நாடுகடந்த குற்றத்துக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்துக்கு இணைப்பாக மக்களை, அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலை தடுக்க, ஒடுக்க மற்றும் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நெறிமுறை |
| UN | ஐக்கிய நாடுகள் |
| UNHCR | அகதியருக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையர் |
| UNODC | போதைப் பொருட்கள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் |

# பொருளடக்கம்

செயலாக்கச் சுருக்கம் 2

பிரிவு 1: **ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பது பற்றிய அறிமுகம்** 3

1.1. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர் என்பவர் யார் 3

1.2. மனிதக் கடத்தலின் விளக்கம் 7

1.3. சுரண்டலின் வகைகளைப் புரிந்து கொள்ளல் 9

பிரிவு 2: கடமைகள், நலன்கள் மற்றும் சவால்கள் 13

2.1. அடையாளம் காண்பது முக்கியம் ஏன் 13

2.2. ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் தங்களை அடையாளம் காண்பித்துக்கொள்ளத் தயங்குவது ஏன் என்பதை அறிந்து கொள்ளுதல் 17

பிரிவு 3: **பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் முறைகள்** 19

3.1. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை யார் அடையாளம் காணமுடியும்? 19

3.2. அடிப்படைச் செயல்முறைகள் 21

3.3. கடத்தலுக்கான குறிகாட்டிகள் 24

பிரிவு 4: **ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பது பற்றிய உதவிக்குறிப்புகளின் தொகுப்பு** 31

# செயலாக்கச் சுருக்கம்

கடத்தலால் பாதிக்கப்பட்டவர் என்பவர் "மக்களை அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலை தடுக்க, ஒடுக்க மற்றும் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நெறிமுறை" -இல் வரையறுத்துள்ளபடி 'மக்களைக் கடத்துதல்' என்ற குற்றத்துக்கு ஆட்பட்ட ஒரு நபராகும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதில் தோல்வியுற்றால் அவர்களைச் சுரண்டுதல் தொடரும் மற்றும் அவர்களுக்கு உரித்தான உதவி மற்றும் பாதுகாப்பை அவர்கள் அடையமுடியாமல் போகும். அத்துடன் அது நீதிக்கு முன் நிறுத்துவதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஆதாரங்களைச் சேகரிக்க முடியாத நிலையும் அதிகாரிகளுக்கு ஏற்படலாம். ஆகவே அடையாளம் காணுதல் என்பது இந்த கடுமையான குற்றத்தைத் தடுத்து, தண்டனையளிப்பதும், அத்துடன் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்து பாதுகாப்பதுமான செயல்முறையின் ஒரு முக்கியமான பகுதியாகும்.

மக்களைக் கடத்துதல் எவ்வாறு சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது, அத்துடன் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வாறு பல்வகையான சுரண்டல்களை அனுபவிக்கிறார்கள் என்பதை தொழில்புரிபவர்கள் அறிந்திருப்பதால், அவர்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் வாய்ப்புகள் அதிகம். அதன்படி, மனிதக் கடத்தலைப் பற்றியும் மற்றும் அது எந்தெந்த வடிவில் உருவெடுக்கலாம் என்பதைப் பற்றியுமான ஒரு கண்ணோட்டத்தை இந்த கொள்கைக் கையேடு வழங்குகிறது. இந்தக் கையேட்டின் நோக்கங்களுக்காக, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை 'அடையாளம் காணுதல்' என்பது ஒரு விரிவான பொருளில் புரிந்துகொள்ளப்படுகிறது. முதல் தொடர்புப் புள்ளியில் ஆரம்பப் பரிசோதனை செயல்முறை, அத்துடன் ஒரு நபர் பாதிக்கப்பட்டவர் எனக் கருதப்பட்டால், ஆரம்ப உதவி மற்றும் பாதுகாப்பு, ஆகியவை இதில் அடங்கியிருக்கின்றன. மேலும் ஆதாரங்கள் வெளிச்சத்துக்கு வரும்போது ஒரு நபர் பாதிக்கப்பட்டவர் என்ற நிலைமையைச் சரிபார்த்தலும், அத்துடன் சில சந்தர்ப்பங்களில் குற்றவியல் செயல்முறை முடிந்தபின்னர் அந்த நபர் பாதிக்கப்பட்டவர் என்பதை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்துதலும் இதில் அடங்கும்.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் இயல்பாகவே கடினமான வேலையாகும். ஆகவே ஒருவரை பாதிக்கப்பட்டவர் என அடையாளம் காண்பதற்குக் குறைந்த அளவு வரம்பை பயன்படுத்துமாறு மாநிலங்களை இந்தக் கையேடு ஊக்குவிக்கிறது. இது சந்தேகப்படும்படியான நபரின் மேல் நம்பிக்கையை உருவாக்க அதிகாரிகளுக்குத் தேவையான நேரம் கிடைப்பதற்கு முன்பே, குறிப்பாக முதல் தொடர்புப் புள்ளியிலேயே பயனுள்ளதாக இருக்கும். ஒருவர் பாதிக்கப்பட்டவர் என்பது கருதப்பட்டுவிட்டபின், அவர்களுக்கு உரிய உதவியும், பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். அந்த அனுமானம் பின்னர் ஆதாரமற்றவை என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டால், உதவியும், பாதுகாப்பும் அதற்கேற்றார்போல் சரிசெய்யப்பட்ட வேண்டும் அல்லது திரும்பப்பெற வேண்டும்.

மேற்கொண்டு விசாரணைக்கான ஆரம்பப் புள்ளியாக கடத்தலுக்கான 'குறிகாட்டிகளை' பயன்படுத்துவது அடையாளம் காணும் செயல்முறைகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். பல்வேறு வகையிலான சுரண்டல் தொடர்புடையவை உட்பட, குறிகாட்டிகளின் பட்டியல் ஒன்றை இந்தக் கையோடு முன்மொழிகிறது. இது தொழில்புரிபவர்களுக்கும், நிபுணர்கள் அல்லாதவர்களுக்கும் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண உதவிகரமாக இருக்கக்கூடும். இந்த குறிகாட்டிகளைப் புதிப்பித்து, மாற்றிக்கொண்டு மற்றும் சீர்தூக்கி, நிபுணர்கள் அல்லாதோர் உள்ளிட்ட பங்குதாரர்களுக்கு, அவர்கள் எதிர்கொள்ள வாய்ப்புள்ள சூழ்நிலைகளுக்குத் தேவையான வழிகாட்டுதலுடன் வழங்க மாநிலங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாயம் காண்பதில் மாநிலங்களுக்கு முக்கியப் பொறுப்பு இருந்தாலும், அடையாளம் காணும் செயல்முறைகளில் அரசு சாரா மற்றும் சிவில் சமூக அமைப்புகள் மதிப்புமிக்க சொத்தாகும். மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அதிகாரிகளுக்குமிடையே நம்பிக்கையையும், ஒத்துணர்வையும் உருவாக்கும் மிகமுக்கிய பங்கில் அவை ஆதரிக்கப்பட வேண்டும். சட்ட அமலாக்கம், எல்லைப் பாதுகாப்பு, குடிவரவு, தொழிலாளர் கட்டுப்பாடுகள் மற்றும் சமூக சேவை போன்றவற்றைக் கையாளும் அலுவலர்கள் உட்பட மாநிலத்தின் முன்னிலை அதிகாரிகள் தகுந்தமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுபவர்களை, அவர்களது தனிப்பட்ட பண்புகளைக் கருத்தில் கொண்டு, அவர்களின் அந்தரங்கத்துக்கு மதிப்பளித்து, அடையாளம் காணக்கூடிய சிறப்புத் திறன்களைப் பெறவைக்க வேண்டும். சமூக உறுப்பினர்களும் இந்த நிகழ்வினை அறிந்துகொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் எனக்கருதப்படுபவர்களை எவ்வாறு அடையாளம் காண்பது மற்றும் உரிய அதிகாரிகளிடம் தெரிவிப்பது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

# பிரிவு 1:

## ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பது பற்றிய அறிமுகம்

### 1.1. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர் என்பவர் யார்?

மனிதக் கடத்தல் வெவ்வேறு வகைகளில் தோன்றி, வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு இயல்புகளாக வெளிப்படுத்தும் சட்டவிரோதச் செயலாகும். விவசாயம், கட்டுமானம், பராமரிப்பு மற்றும் உபசரிப்பு, வீட்டு வேலை, பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு, காடுகள், மீன்பிடிப்பு, சுரங்கம் மற்றும் ஜவுளிகள் உட்பட பல்வேறு துறைகளில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் சுரண்டப்படுகிறார்கள். மக்கள் சர்வதேச எல்லைகளைத் தாண்டும்போதோ அல்லது அவர்களுடைய சொந்த நாட்டுக்குள்ளேயோ பயன்படுத்திக் கொள்ளப்படலாம். மக்களை மனிதக் கடத்தலில் சிக்கவைக்க பல காரணிகள் இருப்பினும், குறிப்பாக அபாயத்தில் இருப்பது ஆவணமின்றி புலம்பெயர்வோர், இன சிறுபான்மையினர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் உள்ளிட்ட குழுக்கள்தாம். வறுமை, வேலையின்மை, பாலின சமத்துவமின்மை, கல்வி வாய்ப்புகள் மற்றும் வளங்களைப் பெற இயலாமை மற்றும் முறையான பிறப்புப் பதிவு இல்லாமை போன்றவையும் ஆள்கடத்தலில் பாதிப்பை அதிகரிக்கும் காரணிகள் ஆகும்.

எவராயிருந்தாலும், அவர்களுடைய வயது, இனவேறுபாடு, பாலினம், பாலியல் அமைப்பு, நாடு, இன அல்லது சமூகத் தோற்றம், உடல்ஊனம் அல்லது சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், ஒருவர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவராய் இருக்கலாம். ஆள்கடத்தலால் எளிமையாகக் கூறுவதானால், பாதிக்கப்பட்டவர் என்பவர் மக்களைக் கடத்தும் குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நபர். கீழேயுள்ள பிரிவு 1.2-இல் வரையறுத்துள்ளபடி மக்களை அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலை தடுக்க, ஒடுக்க மற்றும் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நெறிமுறையானது (மக்கள்கடத்தல் நெறிமுறை) 'மக்களைக் கடத்தும்' குற்றத்துக்கான சர்வதேசப் பொருள்விளக்கத்தைத் தருகிறது.

நடைமுறையில், இந்தக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் எவர் என்பதை அடையாளம் காண்பது எப்போதும் சுலபமானது அல்ல. மொழி அல்லது கலாசாரம் சம்பந்தப்பட்ட தொடர்பு கொள்வதில் சவால்கள், மற்றும் பயம் அல்லது நம்பிக்கையின்மை காரணமாக அதிகாரிகளிடம் குறிப்பாக முதல் தொடர்புப் புள்ளியில் பேசுவதற்குப் பாதிக்கப்பட்டவர்களின் தயக்கம் போன்றவை இடையூறுகளில் அடங்கும். தங்கள் அனுபவங்களைப் பொறுத்து, தாங்கள் கடத்தப்பட்டிருப்பதாகவோ அல்லது சுரண்டப்பட்டிருப்பதாகவோ அவர்கள் கருதாமல் இருக்கலாம். கொடுத்துள்ளதாகக் கூறப்படும் ஒப்புதலானது மிரட்டியோ, அச்சுறுத்தியோ

அல்லது மோசடி செய்தோ பெறப்பட்டிருந்தாலும், அவர்கள் அந்த சூழ்நிலைக்கு ஒப்புதல் அளித்துவிட்டதாக சிலர் நம்பக்கூடும். இது போன்ற வேறு பிற காரணங்களுக்காக ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்படுவதில்லை.

**உதவிக்குறிப்பு: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கருதப்பட்டவர்களை பாதிக்கப்பட்டவர்கள் என நடத்துவதற்குச் சாதகமான அனுமானத்தை அறிமுகம் செய்தல்**

ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர் என அதிகாரிகள் சந்தேகப்படும் நபரை, ஆரம்ப உதவி மற்றும் பாதுகாப்பை வழங்கும் நோக்கத்துக்காக, அவர் பாதிக்கப்பட்டவர் என்று அனுமானத்தின் பேரில் நடத்துவதற்கு, அதிகாரிகளுக்கு, பாதிக்கப் பட்டவர்களை அடையாளம் காணும் மாநிலக் கொள்கைகள் அனுமதிக்க வேண்டும்.

[1] இந்த ஆவணம் முழுவதிலும், மக்களை அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலை தடுக்க, ஒடுக்க மற்றும் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நெறிமுறை (மக்களைக் கடத்துதல் நெறிமுறை) சட்டவிதி 3-இல் குறிப்பிட்டுள்ளபடி 'ஆள்கடத்தல்' என்ற வார்த்தை 'மக்களைக் கடத்துதலைக்' குறிப்பிடுவதாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு நபர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர் எனக் கருதப்பட்டு, அவ்வாறான ஒரு சூழ்நிலையில் அவர் இருந்திருக்கலாம் என்ற ஒரு சந்தேகம் இருக்கும் பட்சத்தில், அப்படிக் கருதுவது ஒரு நல்ல நடைமுறையாகும். அப்படிப்பட்ட ஓர் அனுமானத்தைப் பிரயோகிப்பதன் பொருள் என்னவென்றால், ஒரு நபர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருந்தால். அதிகாரிகள் அவரை உதவி மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் நபராக நடத்தியிருப்பார்கள். அதன் பின்னர் அவர் கடத்தலால் பாதிக்கப்பட்டவர் இல்லை என்றும் உதவியும், பாதுகாப்பும் தேவையில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டால், அந்தச் சமயத்தில் அத்தகைய ஆதரவு திரும்பப்பெறப்படும். கடத்தப்பட்டதற்கான அறிகுறிகள் ஒரு நபரிடம் தென்பட்டால், அவர் உடல் தாக்குதல் அல்லது பாலியல் வன்முறை அல்லது ஆள்கடத்தல் போன்ற மற்ற வகையிலான குற்றங்களால் பாதிக்கப்பட்டவராக இருப்பார்.

**உதவிக்குறிப்பு: மனிதக்கடத்தல் தொடர்பான குற்றங்களில் விழிப்புணர்வை உண்டாக்குதல்**

**மற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்ட நபர்கள், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்படாதவர்களாக இருக்கலாம் அத்துடன் அவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்புத் தேவை இருக்கலாம். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுவதற்குப் பொறுப்பான தொழில்புரிபவர்கள் அது தொடர்பான குற்றவகைகளை அறிந்திருக்க வேண்டும், அத்துடன் அதற்கேற்ப எதிர்கொள்ளும் திறமையும் பெற்றிருக்க வேண்டும்.**

ஒரு நபர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவராய் இல்லாமலிருந்து, மாறாக மற்றொரு குற்றத்தால் பாதிக்கப்பட்டவராய் இருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டால், அவர் இன்னும் பொருத்தமான ஆதரவுச் சேவைகளுக்கு மாற்றப்படுவார். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வம்சாவளி நாட்டுக்கு வெளியேயும் இருக்கலாம். அத்துடன் இனம், மதம், நாடு, குறிப்பிட்ட சமூகக் குழுவின் அங்கத்தினர் அல்லது அரசியல் கருத்து காரணங்களுக்காக துன்புறுத்தக்கூடும் என்ற வலுவான காரணத்துக்காகப் பயம் இருக்கலாம். இது போன்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் புகலிட செயல்முறைகளுக்கு அனுப்பப்பட வேண்டும்.

மனிதக் கடத்தலில் அனுபவப்பட்ட மக்கள், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள், அத்துடன் அவர்கள் மாநிலங்களால் அவ்வாறே நடத்தப்பட்டு, அதன்படி பாதுகாக்கப்பட வேண்டும். குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களோடு கூட, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களும் தங்களுடைய மனித உரிமைளைத் தவறாகப் பயன்படுத்தும் அனுபவத்தையும், அத்துடன் உடல் அல்லது மனக்காயம், உணர்ச்சித் துன்பம், அவமான உணர்வுகள் அல்லது அவதூறு மற்றும் பொருளாதார இழப்பு உட்பட மற்ற துன்பங்களையும் பெற்றிருக்கலாம்.

கடத்தல்காரர் அடையாளம்காணப்பட்டிருந்தாலும், கைது செய்யப்பட்டிருந்தாலும், விசாரணை செய்யப்பட்டிருந்தாலும் அல்லது தண்டனை பெற்றிருந்தாலும் அத்துடன் பாதிக்கப்பட்டவருக்கும், குற்றம் சாட்டப்பட்ட கடத்தல்காரருக்கும் எந்தக் குடும்ப உறவும் இருந்தாலும், இல்லையென்றாலும் ஒரு நபர் பாதிக்கப்பட்டவர்தான் என்று கருதப்பட வேண்டும்.

### அட்டவணை 1: பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதில் கற்பனையும், உண்மையும்[2]

| கற்பனை | உண்மை | மேலதிக விவரங்களுக்குப் பார்க்கவும்: |
|---|---|---|
| ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதப்படுவதற்கு மக்கள் சர்வதேச எல்லைகளைக் கடக்க வேண்டும். | அதிகமான மக்கள் சர்வதேச எல்லைகளைக் கடந்து கடத்தப்பட்டாலும், மக்களைக் கடத்துதல் ஒரு நாட்டின் எல்லைக்குள்ளும் நடக்கக்கூடும். இந்த நிகழ்வு உள் கடத்தல் (அல்லது உள்நாட்டுக் கடத்தல்) எனப்படும். | 1.2 மனிதக் கடத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது |

[2] இந்த அட்டவணையில் விளக்கப்பட்டிருக்கும் கருத்துக்களுக்குச் சம்பந்தப்பட்ட மேலதிக விவரங்கள் பின்வரும் கருத்து ஆதாரத்தில் காணலாம்: மனிதர்களைக் கடத்துதல் பற்றிய உலகளாவிய அறிக்கை, UNODC. 2014; ILO கட்டாய உழைப்பு பற்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) உலகளாவிய மதிப்பீடு 2012: முடிவுகளும், ஆராய்ச்சி முறைகளும், சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), 2012; ஐக்கிய நாடுகளின் அரசு, உள்துறை, மனிதர்களைக் கடத்துதலை கண்காணித்தல் மற்றும் எதிர்த்துப் போராடுதல் அலுவலகம், 2014.

| | | |
|---|---|---|
| பெண்கள் மற்றும் குழந்தைகள் மட்டுமே ஆள்கடத்தலில் பாதிக்கப்படவர்களாக இருக்கமுடியும் | மனிதக் கடத்தல் பற்றிய மிகுதியான ஆய்வுகளும், ஊடகச் செய்திகளும் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆள்கடத்தலில் கவனம் செலுத்துயிருக்கின்றன. இருப்பினும், ஆண்களும் கூட எல்லாவிதமான சுரண்டலின் பேரிலும், குறிப்பாகக் கட்டாய உழைப்புக்காகக் கடத்தப்படுகின்றனர் | 1.2 மனிதக் கடத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது<br><br>1.3 மனிதக் கடத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது |
| ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் பாலியல் தொழிலுக்காகக் கடத்தப்படுகிறார்கள் | பாலியல் தொழிலுக்காகக் கடத்தப்படுபவர்கள் ஆள்கடத்தலில் கணிசமான பகுதியாக இருந்தாலும், கட்டாய உழைப்பு, அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்துக்கு நிகரான நடைமுறைகள், அடிமைப் பண்பு, உறுப்பு நீக்கம் அத்துடன் மற்ற வகையான சுரண்டல்கள் போன்ற நோக்கங்களுக்காகவும் மக்கள் கடத்தப்படுகிறார்கள் | 1.3 மனிதக் கடத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது |
| பாலியல் தொழிலில் பணிபுரியும் அனைவரும் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாகும். | பாலியல் சுரண்டல் நோக்கங்களுக்காக நடைபெறும் ஆள்கடத்தல், அடிக்கடி நிகழ்கின்ற மற்றும் வெளிப்படையாகத் தெரியும் வகைகளில் ஒன்றாக இருந்தாலும், பாலியல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களெல்லாம் கடத்தப்பட்டவர்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை. பாலியல் சுரண்டல் நோக்கத்துக்காக ஒரு நபர் ஆள்கடத்தல் செய்யப்பட்டிருப்பதாகக் குறிக்க, மிரட்டல், அச்சுறுத்தல் மற்றும் ஏமாற்றுதல் போன்ற தடை செய்யப்பட்ட வழிமுறைகள் (பாதிக்கப்பட்டவர் ஒரு வயது வந்தவராக இருக்கும் பட்சத்தில்) பயன்படுத்தப் பட்டிருக்கக் கூடும். | 1.3 மனிதக் கடத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது<br><br>3.3 ஆள்கடத்தலுக்கான குறிகாட்டிகள் |
| ஆவணமின்றி புலம்பெயர்வோர் அனைவரும் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள். வழக்கமான சூழ்நிலைகளில் புலம்பெயர்வோர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்க முடியாது | பாதிக்கப்பட்டவர்கள், முறையற்ற வகையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு, அங்கே அவர்கள் சுரண்டப்பட்டாலும், நாட்டுக்குள் முறையற்ற வகையில் நுழையும் அனைவருமே சுரண்டப்படுபவர்கள் அல்ல. மேலும், ஒரு நாட்டுக்குள் முறையான வகையில் நுழைந்திருக்கும் அல்லது தங்கியிருக்கும் மக்களும் கூட ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். | 1.2 மனிதக் கடத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது<br><br>2.2 ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதலை அங்கீகரிப்பதிலும் மற்றும் தீர்ப்பதிலும் உள்ள சவால்கள்<br><br>3.3 ஆள்கடத்தலுக்கான குறிகாட்டிகள் |

| | | |
|---|---|---|
| தங்களுடைய நிலைமையை அறிந்திருக்கும் அல்லது அதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாகத் தோன்றும் மக்கள், ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட மாட்டார்கள் | ஒரு நபர் அவருடைய நிலைமையை ஏற்றுக்கொள்ள அல்லது நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொள்ள (எ.கா. வேலைவாய்ப்பு) ஆரம்பத்திலிருந்தே ஒப்புக்கொள்வதாகத் தோன்றினாலும் கூட, அவர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவராக இருக்கலாம்.<br><br>ஒரு குழந்தையின் ஒப்புதல் எப்போதுமே பொருத்தமற்றதாகும், அத்துடன் மிரட்டல், அச்சுறுத்தல் மற்றும் ஏமாற்றுதல் போன்ற தடை செய்யப்பட்ட வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட ஒரு வயது வந்தவரின் இணக்கம் பெறப்பட்டிருந்தால், அவரது ஒப்புதலும் பொருத்தமற்றதாகும். | 1.2 மனிதக் கடத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது<br><br>3.3 ஆள்கடத்தலுக்கான குறிகாட்டிகள் |
| ஆள்கடத்தல்காரருடன் உறவுமுறை உள்ள, அல்லது தொடர்பு வைத்திருக்கும் மக்கள், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதப்பட மாட்டார்கள் | பெரும்பாலும் ஒரு நண்பர் அல்லது உறவினர், பாதிக்கப்பட்டவர்களை ஆசைகாட்டியோ அல்லது தயார்ப்படுத்தியோ மனிதக் கடத்தலின் சூழ்நிலைக்கு ஆளாக்குவார். திருமணம் மற்றும் பிற நெருக்கமான உறவுகள் மூலமும் ஆள்கடத்தல்காரர்கள் தங்களால் பாதிக்கப்பட்டவர்களைக் கட்டுப்படுத்தலாம். அடிமைத்தனம் அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட வடிவிலான திருமணம் 'அடிமைத்தனத்துக்கு நிகரான நடைமுறைகளில்' அடங்கியிருக்கக்கூடும். [3] | 3.3 ஆள்கடத்தலுக்கான குறிகாட்டிகள் |
| தங்களுடைய வாழ்க்கை கவலையற்றதாகவோ அல்லது பொருளாதார ரீதியாக சிறப்பானதாகவே இருப்பதாக நம்பும் மக்களை ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதமுடியாது | ஒருவர் அதிகப் பணம் சம்பாதித்தாலும் மற்றும்/அல்லது அதிக வசதியான வாழ்க்கைச் சூழ்நிலையில் இருந்தாலும் அதற்குமுன் அவர்கள் கடத்தப்பட்டிருந்தால், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். சுரண்டலானது பாரபட்சமற்றமுறையில் மதிப்பீடு செய்ய வேண்டும். | 2.2 ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதலை அங்கீகரிப்பதிலும் மற்றும் தீர்ப்பதிலும் உள்ள சவால்கள்<br><br>3.3 ஆள்கடத்தலுக்கான குறிகாட்டிகள் |

[9] பிரிவு 1.3-இல் விவாதித்துள்ளபடி, அடிமைத்தனத்தை ஒழித்தல் பற்றிய 1956 துணை ஒப்பந்தம், அடிமை வர்த்தகம் மற்றும் அடிமைத்தனத்துக்கு நிகரான நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள் (துணை ஒப்பந்தம்) பற்றிய துணை ஒப்பந்தம், இவற்றில் 'அடிமைத்தனத்துக்கு நிகரான நடைமுறைகள்' என்ற பதம் வரையறுக்கப்பட்டுள்ளது.


## 1.2. மனிதக் கடத்தலின் விளக்கம்

மனிதர்களைக் கடத்துதல் நெறிமுறையின் நோக்கங்களில் ஒன்று, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை, அவர்களின் மனித உரிமைகளுக்கு முழு மரியாதை கொடுத்துப் பாதுகாத்தல் மற்றும் உதவுதல் எனக் கூறப்படுகிறது.[4] இத்தகைய உதவி மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டுகொள்ள, மாநிலங்களுக்கு ஒரு மறைமுகமான தேவையை இந்த நோக்கம் உருவாக்குகிறது. ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் யார் என அடையாளம் கண்டுகொள்வதற்கு, அந்தக் குற்றத்தின் சட்டபூர்வ பொருள்விளக்கத்தின் அடிப்படையில் மனிதக் கடத்தல் என்றால் என்ன என்பதை மாநில அதிகாரிகள் அறியவேண்டும். சர்வதேசச் சட்டத்தில், குற்றத்தின் பொருள்விளக்கம், மனிதர்களைக் கடத்துதல் நெறிமுறை சட்டப்பிரிவு 3(ஏ)-இல் காணப்படுகிறது.

> “மக்களைக் கடத்துதல்” என்பதன் பொருள் என்னவென்றால், அச்சுறுத்தல், பலத்தைப் பிரயோகித்தல், அல்லது மற்ற வகைகளிலான நிர்ப்பந்தம், கடத்தல், மோசடி, ஏமாற்றுதல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது பலவீன நிலைமையைத் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது மற்றொரு நபரின் கட்டுப்பாட்டில் ஒரு நபரின் சம்மதம் பெறுவதற்கு பணம் அல்லது சலுகைகள் கொடுக்கல் வாங்கல் போன்றவை மூலமாக சுரண்டல் செய்யும் நோக்கத்துக்காக ஆள்சேர்ப்பு, கூட்டிச்செல்லுதல், இடமாற்றம், ஆள்பதுக்கல் அல்லது ஆட்களை அழைத்தல் போன்றவையாகும். சுரண்டலில் குறைந்தபட்சம், மற்றவர்களை விபச்சாரத்துக்காகச் சுரண்டல் அல்லது வேறு வகையிலான பாலியல் சுரண்டல், கட்டாய உழைப்பு அல்லது சேவைகள், அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்துக்கு நிகரான நடைமுறைகள், அடிமைப் பண்பு அல்லது உறுப்புகளை அகற்றுதல் போன்றவை அடங்கும்.

கீழேயுள்ள படம் 1 பெரியவர்களை மனிதக் கடத்தல் செய்யும் குற்றத்தில் இருக்க வேண்டிய மூன்று கூறுகளைக் கோடிட்டுக் காட்டுகிறது. ஒவ்வொரு பத்தியிலுமுள்ள எந்தவொரு கூறும் ஆள்கடத்தலை நிலைநாட்டுவதற்குத் தேவைப்படும்.

**படம் 1: மக்களைக் கடத்துவதில் சர்வதேச சட்ட சொற்பொருள் விளக்கத்தின் முக்கியக் கூறுகள்:** [5]




[4] மனிதர்களைக் கடத்துதல் நெறிமுறையின் சட்டப்பிரிவு 2(பி)-ஐப் பார்க்கவும்.
[5] ஆதாரம்: மக்களைக் கடத்துதலைச் சட்டவிரோதமாக்குதல் பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2014, பக்கம் 5.

எங்கெல்லாம் இதில் கொடுக்கப்பட்ட வழிமுறைகள் பயன்படுத்தப்படுத்தப்படுகின்றனவோ, அங்கெல்லம் பாதிக்கப்படுவோரின் ஒப்புதல் பொருளற்றதாகி விடுகிறது என்று நெறிமுறை சட்டப்பிரிவு 3(பி) கருத்து வழங்குகிறது. பாதிக்கப்படுவோர் 18 வயதுக்கு உட்பட்ட ஒரு குழந்தையாக இருக்கும்பட்சத்தில் கொடுக்கப்பட்ட வழிமுறைகள் நிரூபிக்கப்படவேண்டும் என்ற அவசியமில்லை என்று சட்டப்பிரிவு 3(சி) மற்றும் (டி) கூறுகின்றன.[6]

ஆள்கடத்தல் பிரச்சினைகளைத் தீர்க்க நெறிமுறை முதல் சர்வதேசக் கருவி அல்ல, ஆனால் அது இன்றைய தேதிக்கு மிக விரிவான சொற்பொருள் விளக்கங்களை வழங்குகிறது. அத்துடன் அது தேசியச் சட்டத்தில் குற்றத்தை வரையறுக்க மாநில அமைப்புகள் நம்பியிருக்கும் முதன்மையான சர்வதேசக் கருவியாகும். சட்டவிதி 3-இன் சொற்பொருள் விளக்கமானது, ஆண்களும், சிறுவர்களும் கூட ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாக முடியும் என்ற புரிதலை நிர்ணயிக்க உதவியிருக்கிறது. அத்துடன் ‘சுரண்டலில்’ பாலியல் சுரண்டல் மட்டுமல்லாது மற்ற வகையான சுரண்டல்களும் அடங்கும்.[7] சொற்பொருள் விளக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட சுரண்டல் வகைகளின் பட்டியலில் சர்வதேசச் சட்டத்தில் மற்றோரிடத்தில் வரையறுக்கப்பட்டுள்ள ‘கட்டாய உழைப்பு அல்லது சேவைகள்’ மற்றும் ‘அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்துக்கு நிகரான நடைமுறைகள்’ அத்துடன் ‘அடிமைப் பண்பு’ மற்றும் ‘உறுப்புகளை அகற்றுதல்’ போன்றவையும் அடங்கும். இந்தப் பட்டியல் சுரண்டல் எனக் கருதப்படுவதற்குரிய நடைமுறைகளின் வகைகளுக்கு ஒரு குறைந்தபட்ச தரநிலையை நிர்ணயித்திருந்தாலும், அது முழுமையானதல்ல. அது புது வகையான சுரண்டலுக்கு ஏற்றபடி மாற்றிக்கொண்டு, வளைந்து கொடுக்கக்கூடிய சொற்பொருள் விளக்கமாகும்.

மனிதர்களைக் கடத்துதலுக்கான சர்வதேச சொற்பொருள் விளக்கத்தை விளக்கிக்கூற பல்வேறு வழிகள் உள்ளன. மனிதக் கடத்தல் என்பது பாதிக்கப்பட்ட ஒருவர், சுரண்டல் என்பது தனித்துத் நிற்கும்வகையில், சுரண்டலுக்கு (“ஆள்சேர்ப்பு, கூட்டிச்செல்லுதல், இடமாற்றம், ஆள்பதுக்கல் அல்லது அழைத்தல்”) ஒப்புக்கொடுக்கும் செயல்முறைதான் எனச் சில அணுகுமுறைகள் கருதுகின்றன. ஆனால் மற்றவை, செயல்முறையுடன் இறுதி முடிவையும் (“சுரண்டல்”) உள்ளடக்கிய குற்றம் என்று பொருள் கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, இடமாற்றம் என்பது ஆள்கடத்தலில் உள்ளடங்குவது இல்லை என்று சொற்பொருள் விளக்கத்தின் துல்லியமான கருத்து அறிவுறுத்துகிறது. ஆனால் ஆள்கடத்தலில் இடமாற்றத்தைக் குறிப்பிடாமல், மனிதர்களைக் கடத்துதலை, முன்குறிப்பிட்டபடி சர்வதேசச் சட்டத்தில் வேறிடத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கட்டாய உழைப்பு போன்ற சுரண்டலின் வகைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது கடினமாகும். மேலும், தேசியச் சட்டத்தில் வெளிப்டையாகக் காண்பிக்கப்பட்டுள்ள சுரண்டலின் வகைகள் மாநிலங்களுக்கிடையே மாறுபடும்.

சர்வதேசச் சட்டத்தில் மனிதக் கடத்தலுக்கும், புலம்பெர்ந்தோரைக் கள்ளக்கடத்தல் செய்வதற்கும் ஒரு சட்டவேறுபாடு உண்டு.[8] நடைமுறையில், குறிப்பாக மனிதக் கடத்தல் நாடுகடந்து நடக்கும்போது, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைக் கள்ளக்கடத்தல் நடவடிக்கைக்கு ஆட்பட்ட ஒரு புலம்பெயர்ந்தவரிடமிருந்து, அதிலும் குறிப்பாக, ஒரே நபர் கள்ளக்கடத்தல் செய்யப்பட்ட புலம்பெயர்ந்தவர் மற்றும் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர் என இருநிலையிலும் இருக்கலாம் என்னும்போது, அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது கடினமாக

**உதவிக்குறிப்பு:** பாதிப்புக்கு ஆளாகக்கூடிய குழுக்களின் மத்தியில் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படுபவர்களை அடையாளம் காணுதல்

**சுரண்டல் கட்டத்துக்கு முன்பு, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் மிகவும் கடினமானதாகும். பாதிப்புக்கு ஆளாகக்கூடியவர்களின் மத்தியில் கடத்தப்பட்ட புலம்பெயர்ந்தோர் உள்ளிட்ட ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படுபவர்களை அடையாளம் காண, அதிகாரிகளுக்கு ஆதரவு தரும்வகையில் தடுப்பு ஏற்பாடுகள் அடங்கியுள்ளன என்பதை மாநிலங்கள் தங்கள் கொள்கை விளக்கங்களில் உறுதி செய்யவேண்டும். அத்துடன் அதற்கேற்ப எதிர்கொள்ளும் திறமையும் பெற்றிருக்க வேண்டும்.**

[6] மக்களைக் கடத்துதலைச் சட்டவிரோதமாக்குதல் பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2014, பக்கங்கள் 4-5-ஐ மேலும் பார்க்கவும்.

[7] 1904, 1910 மற்றும் 1933-இல் சர்வதேச ஒப்பந்தங்கள் விபச்சார நோக்கங்களுக்காக பெண்களையும், சிறுமிகளையும் சர்வதேச எல்லைகளைக் கடந்து கொண்டுசெல்லும் நடைமுறையிலும் கவனம் செலுத்தியிருந்தாலும், மக்களைக் கடத்துலையும் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமியர்களையும் தாண்டி ‘யாராயிருந்தாலும்’ அதைச் சேர்த்து மற்றவர்களின் விபச்சாரச் சுரண்டலையும் ஒடுக்குவதற்கான 1949 ஒப்பந்தம் இருந்தாலும், பலெர்மோ நெறிமுறைதான் பாலுறவுக்குத் தொடர்பில்லாத சுரண்டல் வடிவங்களை ஒருங்கிணைத்த, ஆள்கடத்தலை மையப்படுத்தும் முதல் சர்வதேசக் கருவியாகும்.

[8] நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் கூடுதலாக, நிலம், கடல் மற்றும் வான் வழியாக புலம்பெயர்ந்தோரைக் கடத்தலுக்கு எதிரான நெறிமுறையின் சட்டவிதி 3-இன்படி, புலம்பெயர்ந்தவர்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் என்பது “தேசியக் குடியுரிமை அல்லது நிரந்தரக் குடியுரிமை ஒருவருக்கு இல்லாதபோது மாநில அமைப்புகளுக்குள் ஒரு நபர் சட்டவிரோதமாக நுழைவதினால் பணமோ அல்லது மற்ற பொருளோ இலாபம்” பெறுவதற்கான கொள்முதலாகும்.

இருக்கலாம்.[9] கள்ளக்கடத்தல் செய்யப்பட்ட புலம்பெயர்ந்தவர்கள், ஆள்கடத்தலிலோ அல்லது அவர்களின் பயணத்தின் போது அல்லது அவர்களின் இலக்கு நாட்டுக்கு வந்திறங்கிய போது ஏற்படக்கூடிய வேறுவகையான சுரண்டல்களிலோ வீழக்கூடிய பாதிப்பு உள்ளது. குற்றம்புரிபவர்கள் ஆள்கடத்தல் செய்யும்போது ஒரு குழுவின் சில உறுப்பினர்களைக் கள்ளக்கடத்தல் செய்து, மற்றவர்களை ஆள்கடத்தல் செய்து ஒரே நடவடிக்கையில் இரண்டு குற்றங்களையும் செய்யலாம்.

கள்ளக்கடத்தல் செய்யப்பட்ட புலம்பெயர்ந்தவர்கள் தன்னிச்சையாக, புலம்பெயர்ந்தோரைக் கள்ளக்கடத்தல் செய்பவர்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டாலும், ஆள்கடத்தல், சுரண்டல் மற்றும் பிற குற்றங்களால் (மிரட்டப் பணம் பறித்தல், துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை, கற்பழிப்பு அல்லது சித்திரவதை) பாதிக்கப்படுபவர்களாக ஆகிவிடுவதற்குப் பெரிதும் வாய்ப்புகள் உண்டு. கள்ளக்கடத்தல் பயணத்தின் சூழ்நிலையில், அவர்கள் தங்களைக் கடத்துவதற்கு ஆரம்பத்தில் விருப்பப்பட்டது மறைந்து, பின்னர் வேறு அர்த்தமுள்ள ஒன்றாக மாறியிருக்கலாம்.[10]

எடுத்துக்காட்டாக, நிலையற்ற சூழ்நிலைகளில், புலம்பெயர்வோர் இடைவழியில் தங்களுடைய கடத்தல்காரர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை உருவாகி, தாங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டிய நிலைமைகளைப் பொருட்படுத்தாமல், தங்களுடைய பயணத்தைத் தொடர்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி கிடையாது. இது போன்ற சூழ்நிலைகள் எப்போது கண்டுபிடிக்கப்படும் என்பதைப் பொறுத்து, எதிர்கொள்ளும் நபர்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதைவிட கள்ளக்கடத்தல் செய்யப்பட்ட புலம்பெயர்ந்தோர் என்றே கருதப்படலாம். சுரண்டலுக்குரிய நோக்கம் என்பது ஆள்கடத்தலுக்குரிய குற்றம் என்று நிலைநாட்டப்படவேண்டும். ஆனால் சுரண்டல் ஏற்கனவே நடந்திருந்தால்தான் அதைக் கண்டுபிடிக்கப்படும் வாய்ப்புள்ளது. அதிகாரிகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதை உறுதிசெய்யும் வகையில், கள்ளக்கடத்தல் செய்யப்பட்ட புலம்பெயர்ந்தோரிடையே ஆள்கடத்தலுக்கான குறிகாட்டிகளைப் பார்க்கவேண்டும்.

## 1.3. சுரண்டலின் வகைகளைப் புரிந்து கொள்ளல்

ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் சுரண்டப்பட்டதன் பின்புதான் அடையாளம் காணப்படுகிறார்கள். ஆகவே சுரண்டலின் பல்வேறு வகைகளைப் பற்றி சர்வதேசச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி புரிந்துகொள்வது அவசியமாகும். சுரண்டலுக்கான ஆதாரங்கள் ஆள்கடத்தலுக்கான அனுமானத்துக்கு ஆதரவளிப்பதில் குறிப்பாகப் பயனுள்ளதாய் இருக்கும்.

பல நாடுகளில், பாலியல் சுரண்டலின் நோக்கத்துக்காகவே, ஆள்கடத்தலில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்படுகிறது. பாலியல் சுரண்டல், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தப்பட்டது, உலகம் முழுவதும் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது. ஆனால் சுரண்டல்களின் மற்ற வகைகளைப் புரிந்து கொள்வதும் அவசியமாகும்.

### கட்டாய உழைப்பு அல்லது சேவைகள்

1930 பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) கட்டாய உழைப்பு உடன்படிக்கையின்படி ‘கட்டாய உழைப்பு அல்லது சேவைகள்’ என்பவை “எந்தவொரு நபரிடமிருந்தும் பெறப்படும் எல்லா வேலை அல்லது சேவையும் தண்டனைக்கான அச்சுறுத்தல் அடிப்படையிலும், மேலும் அதை அந்த நபர் தன்னிச்சையாகத் தராமல் இருப்பதாகும்”.[11] ‘அச்சுறுத்தல்’ என்பது வேலைகொடுப்பவர் மூலம் உடல்ரீதியாகவும் மற்றும் உளவியல்ரீதியாகவும் நிர்ப்பந்தப்படுத்துவதும் உள்ளடங்கும்.[12] பதவி உயர்வு, இடமாற்றம், புதிய வேலைவாய்ப்பு அல்லது வீட்டுவசதி போன்ற சாத்தியக்கூறுகளை மறுப்பது போன்றவையும் அடங்கும்.[13] “சுயவிருப்பமின்மையும்” கட்டாய உழைப்பை அடையாளம் காண்பதில் முக்கியமானதாகும். தொழிலாளி தன்னுடைய சம்மதத்தைத் தாராளமாகத் தராதவரையும் மற்றும் திரும்பப் பெற முடியாதவரையும் உழைப்பு என்பது கட்டாயப்படுத்தல்தான்.

[9] மனிதக் கடத்துதலுக்கும், புலம்பெர்ந்தோரைக் கள்ளக்கடத்தல் செய்வதற்கும் உள்ள சட்டவேறுபாட்டைப் பற்றி மேலும் விரிவான கலந்துரையாடலுக்கு மக்களைக் கடத்துதலைச் சட்டவிரோதமாக்குதல் பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2014, பக்கங்கள் 8-9-ஐயும் மற்றும் புலம்பெயர்ந்தோர் கள்ளக்கடத்தலைச் சட்டவிரோதமாக்குதல் பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2014, பக்கங்கள் 9-10-ஐயும் பார்க்கவும்.

[10] நிலம், கடல் மற்றும் வான் வழியாக புலம்பெயர்ந்தோரைக் கடத்தலுக்கு எதிரான நெறிமுறை, (புலம்பெயர்ந்தோர் கள்ளக்கடத்தல்) மனிதர்களைக் கடத்துதல் நெறிமுறையில் வரையறுத்துள்ளதற்கு ஒத்த கட்டாயப் பாதுகாப்பு விதிகளைக்

[11] கட்டாய உழைப்பு பற்றிய பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் (ILO) பொருள்விளக்கம், கட்டாய உழைப்பு ஒப்பந்தத்துக்கான நெறிமுறையைத் தனதாக்கிக் கொண்டு 2014-இல் மறுபடியும் உறுதிசெய்யப்பட்டது. பன்னாட்டுத் தொழிலாளர் மாநாடு, கட்டாய உழைப்பு ஒப்பந்தத்துக்கான நெறிமுறை வாசகம், 1930, இடைக்காலப் பதிவு 9-ஏ, 103-ஆவது அமர்வு, ஜெனிவா, 2014, சட்டப்பிரிவு 1(3).

[12] பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO), மரபுகள் மற்றும் பரிந்துரைகளைச் செயல்படுத்துதல் பற்றிய நிபுணர் குழு அறிக்கை, அறிக்கை 3 (பாகம் 1-ஏ), பன்னாட்டு தொழிலாளர் மாநாடு, 90-ஆவது அமர்வு, ஜெனிவா, 2002, பக்கம் 98.

[13] கட்டாய உழைப்பு ஒழிப்பு, மரபுகள் மற்றும் பரிந்துரைகளைச் செயல்படுத்துதல் பற்றிய நிபுணர் குழு பொதுக் கருத்தாய்வு, பன்னாட்டுத் தொழிலாளர் மாநாடு (ILC), 65-ஆவது அமர்வு, ஜெனிவா, 1979, பத்தி 21 (இனிமேல்: கட்டாய உழைப்பு ஒழிப்பு, 1979-இன் பொதுக் கருத்தாய்வு). கட்டாய உழைப்பை வேரறுத்தல், 2007-இன் பொதுக்கருத்தாய்வு, பத்தி 37-ஐயும் பார்க்கவும்.

## சிறார் உழைப்பு - சிறார் வேலை ஒப்பீடு

சிறார் உழைப்பு என்பதை 18 வயதுக்குக் குறைவான நபர் செய்யக்கூடிய, அவன் அல்லது அவளது உடல்நலம் மற்றும் பாதுகாப்புக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய அல்லது அவன் அல்லது அவள் கல்வி அல்லது தொழில்சார்ந்த புத்தறிவுப் பயிற்சியை தடுக்கக்கூடிய எந்தவொரு வேலை அல்லது சேவை என்று பணிநியமன சேர்க்கைக்குக் குறைந்தபட்ச வயது குறித்த1973 பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) விளக்குகிறது. சிறார் உழைப்பு என்பது சிறார் வேலையிலிருந்து வித்தியாசமானது. சிறார் வேலையில் குழந்தைகளின் உடல்நலம் அல்லது பாதுகாப்பில் அல்லது அவர்களது கல்வி வாய்ப்புகளில் எந்தவித சமரசமும் கிடையாது.

### அடிமைத்தனம் மற்றும் அடிமைத்தனத்துக்கு நிகரான நடைமுறைகள்

அடிமைத்தனம் மனிதச் சுரண்டலின் மிகத் தீவிரமான வடிவம் என்று கருதப்படுகிறது. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை என்பது சர்வதேசச் சட்டத்தின் சில நெறிமுறைகளில் ஒன்றாகும். அந்தச் சட்டத்திலிருந்து மாநிலங்கள் எப்போதும் 'நீக்கிவிட' முடியாது. மாநிலங்கள் எந்தச் சூழ்நிலையிலும் அடிமைத்தனத்தை அனுமதிக்க முடியவே முடியாது என்பதே இதன் பொருள். அடிமைத்தனம் என்பது முதன்முதலாக 1926 அடிமை வியாபாரம் மற்றும் அடிமைத்தனத்தை ஒடுக்குவதற்கான ஒப்பந்தத்தில் ('அடிமைத்தனம் பற்றிய ஒப்பந்தம்' என்று அழைக்கப்படுகிறது) "சொந்தம் கொண்டாடும் உரிமையில் இணைக்கப்பட்ட ஏதாவது அல்லது அனைத்து அதிகாரங்களையும் ஒரு நபரின் மேல் பிரயோகிக்கும்போது அவரின் அந்தஸ்து அல்லது நிலை"[14] என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அடிமைத்தனம் என்பது, அதன் அடிமட்ட அளவில், சொந்தம் கொண்டாடுதல்; 'சொந்தம் கொண்டாடும் உரிமையில் இணைக்கப்பட்ட அதிகாரங்கள்' எனக் கூறப்படும் பாரம்பரிய அடிமைத்தனம் இன்னும் அடிமைத்தனத்தின் சமகால வடிவத்திலான ஒரு அம்சமாகக் கருதப்படுகிறது. அடிமைத்தனத்தை முக்கியப்படுத்தும் சிலர் அடிமைத்தனம் பற்றிய ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவரின் பெயர், மதம், வாழ்க்கைத் துணை அல்லது பாலியல் துணை அத்துடன் அவரது வாரிசுகளின் எதிர்காலநிலை போன்றவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரியைச் சேர்த்துள்ளனர்.[15] அடிமைத்தனத்தில் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையைப் பேணுகின்ற உடல் அல்லது மனத் திறனைக் குறைக்கும் நடத்தையையும் உள்ளடக்கியிருக்கக்கூடும்.[16]

## உதவிக்குறிப்பு: அடிமைத்தனத்தை அடையாளம் காணுதல்

அடிமைத்தனமானது சூழ்நிலையினால் உருவாகும் நிலைமையைக் காட்டிலும், குற்றம் புரிந்தவர் மற்றும் அவரால் பாதிக்கப்பட்டவருக்கிடையே ஏற்பட்டுள்ள உறவால் குறிக்கப்படுகிறது. அடிமைத்தனத்துக்கு ஆளான நிலைமையில் உள்ள ஒரு நபர் வசதியாய் வாழ முடியும் எனக் கருதப்பட்டாலும், அடிப்படையான சொந்த முடிவுகளை அவரால் எடுக்க முடியாது என்பதை அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

1956 அடிமைத்தனத்தை ஒழித்தல் பற்றிய ஒப்பந்தம், அடிமை வர்த்தகம் மற்றும் அடிமைத்தனத்துக்கு நிகரான நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள் (துணை ஒப்பந்தம்) பற்றிய துணை ஒப்பந்தத்தால் அடிமைத்தனத்துக்கு நிகரான நடைமுறைகள் தடைசெய்யப்பட்டன. 'அடிமைத்தனத்துக்கு நிகரான நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள்' உரிமையின் அம்சங்களைக் கொண்ட சுரண்டுகிற மனித உறவுகளைக் குறிக்கின்றன. அவை சட்டத்தினால் அல்ல, ஆனால் விருப்பம், பாரம்பரியம், அல்லது சமூக நடைமுறையால் பராமரிக்கப்படுகின்றன. குறிப்பாக, துணை ஒப்பந்தம், அடிமைத்தனத்துக்கு நிகரான நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளைக் குறிப்பிடுகிறது:

[14] அடிமை வர்த்தகம் மற்றும் அடிமைத்தனத்தை ஒடுக்குவதற்கான ஒப்பந்தம், 60 உலக நாடுகள் சங்கம் உடன்படிக்கை தொடர் 253, 25 செப்டம்பர் 1926, 9 மார்ச் 1927-இல் அமலுக்கு வந்தது (அடிமைத்தனம் பற்றிய ஒப்பந்தம்).

[15] எடுத்துக்காட்டாக, பார்க்க: அரசு தரப்பு வழக்கறிஞர் எதிராக வி. குனாரக், கோவேக் மற்றும் யுகோவிக் வழக்கு IT-96-23-T மற்றும் IT-96-23/1-T, முன்னாள் யூகோஸ்லேவியா மேல்முறையீட்டு நீதி மண்டபம், 12 ஜூன் 2002.

[16] எடுத்துக்காட்டாக, பார்க்க: அடிமைத்தனத்தின் சட்ட அளவுருக்கள் பற்றிய பெல்லாஜியோ – ஹார்வர்டு வழிகாட்டுதல்கள், அடிமைத்தனத்தின் சட்ட அளவுருக்கள் பற்றிய ஆராய்ச்சி வலைப்பின்னல், 2012.

- கடன் ஒப்பந்தம் (சட்டவிதி 1 (ஏ))-யின்படி "தன்னுடைய சொந்தச் சேவைகளை வழங்குவதாக ஒரு கடன்காரரால் கொடுக்கப்பட்ட வாக்குறுதியால் எழுந்த அந்தஸ்து அல்லது நிலை அல்லது தனது கட்டுப்பாட்டின கீழ் இருக்கும் ஒரு நபருக்குக் கடனுக்குப் பிணையாக, நியாயமாக மதிப்பீடு செய்யப்பட்ட, அத்தகைய சேவைகளின் மதிப்பு கடனைக் கழிப்பதற்குப் பயன்படுத்தப் படாமலோ அல்லது அத்தகைய சேவைகளின் காலஅளவு மட்டுப்படுத்தப்படவோ, தன்மை வரையறுக்கப்படவோ இல்லாத நிலையில் எழுகின்ற அந்தஸ்து அல்லது நிலை". வேறு வகையில் கூறுவதானால், கடன் ஒப்பந்தம் என்பது, ஒரு நபர் திருப்பித் தரவே முடியாத ஒரு கடனுக்காக சேவைகளை வழங்குகிற சூழ்நிலையைக் குறிக்கிறது.
- கொத்தடிமை (சட்டப்பிரிவு 1(பி)) என்பது "சட்டம், விருப்பம் அல்லது ஒப்பந்தத்தின் படி வெகுமதி கிடைக்கிறதோ இல்லையோ, மற்றொரு நபருக்குச் சொந்தமான நிலத்தில் வாழ வேண்டிய மற்றும் உழைக்க வேண்டிய மற்றும் சில நிர்ணயிக்கப்பட்ட சேவைகளை, அந்த நபருக்காகச் செய்ய வேண்டிய, மற்றும் தன்னுடையஅந்தஸ்தை மாற்ற உரிமையில்லாத குத்தகைக்காரரின் நிலைமை அல்லது அந்தஸ்து"

**உதவிக்குறிப்பு:** கடன் ஒப்பந்தத்தை அடையாளம் காணுதல்

கடன் ஒப்பந்தம் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட பலருக்கு ஒரு பொதுவான அனுபவமாகும். கடன் ஒப்பந்தத்துக்கான சூழ்நிலையை, உறுதி செய்ய முடியாத அளவுக்கு, அத்துடன் எந்த அளவுக்கு வேலை அல்லது சேவை செய்தாலும் அடைக்கமுடியாத அளவுக்குக் கடன் இருப்பது மூலம் அடையாளம் காணலாம். பல அதிகார எல்லைகள் கடன் ஒப்பந்தத்தை மிக விரிவாகப் புரிந்து வைத்துள்ளன. ஏனென்றால் கடனைத் திருப்பித் தருவதற்கு உழைப்பு அல்லது சேவைகளை வழங்கும் சூழ்நிலைகள் சுரண்டல் தன்மையுடையவை.

- நிறுவனம் அல்லது நடைமுறை (சட்டப்பிரிவு 1(சி)) –இன்படி;
  "(i) மறுக்கும் உரிமையில்லாத ஒரு பெண்ணுக்குத் திருமணத்தின் போது பணம் அல்லது அது போன்றவற்றை அவளுடைய பெற்றோருக்கு, பாதுகாவலருக்கு, குடும்பத்துக்கு அல்லது வேறு ஒரு நபருக்கு அல்லது குழுவுக்குச் செலுத்துதல் அல்லது செலுத்துவதாக வாக்குறுதி தருதல்; அல்லது
  (ii) ஒரு பெண்ணின் கணவன், அவனுடைய குடும்பம் அல்லது அவனுடைய இனவழி, அவளுக்குத் தரப்படும் மதிப்புள்ள பொருளுக்காக, மற்றொரு நபருக்குத் தாரை வார்க்கும் உரிமையைக் கொண்டிருத்தல்; அல்லது
  (iii) ஒரு பெண்ணை, அவளுடைய கணவன் இறந்தபின் இன்னொரு நபர் மரபுரிமையாகப் பெறுதல்".
- சுரண்டலுக்காகக் குழந்தைகள் விற்பனை (சட்டவிதி 1(டி)),[17] -இன்படி குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் குழந்தையின் உழைப்பைச் சுரண்ட மூன்றாம் தரப்பை அனுமதிக்கிறார்கள். சமீபத்திய ஆவணங்கள் கூடுதல் ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டவைகளைவிட விரிவான பொருள்விளக்கத்தைத் தருகின்றன. 1999 பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) குழந்தைத் தொழிலாளரின் மிக மோசமான வடிவத்தின் ஒப்பந்தம், ஆயுத மோதல் சமயத்தில் பயன்படுத்த குழந்தைகளின் நிர்ப்பந்தமான அல்லது வலுக்கட்டாய ஆள்சேர்ப்பு, ஆபாசப் படங்கள், கருவியாகப் பயன்படுத்துதல் மற்றும் "உழைப்பு, அது செய்யப்படும் சூழ்நிலைகளைப் பொறுத்து, குழந்தைகளின் உடல்நலம், பாதுகாப்பு அல்லது ஒழுக்கத்துக்குக் கேடு விளைவிக்கும் வாய்ப்பு உள்ளது". 2002 குழந்தை விற்பனை, குழந்தை விபச்சாரம் மற்றும் குழந்தை ஆபாசப்படங்கள் பற்றிய குழந்தையின் உரிமைகள் ஒப்பந்தம் விருப்ப நெறிமுறையின் சட்டவிதி 2(ஏ), 'குழந்தை விற்பனை' என்பது "ஒரு குழந்தை ஒரு நபரால் அல்லது நபர்கள் குழுவால் மற்றொருவரிடம் பணத்துக்காக அல்லது வேறு ஏதாவது கவனிப்புக்காக செய்யப்பபடும் ஒரு செயல் அல்லது பரிவர்த்தனை"[18] என விரிவாக வரையறுக்கிறது.

**உதவிக்குறிப்பு:** கட்டாயத் திருமணத்தை அடையாளம் காணுதல்

பெண்களின் கட்டாயத் திருமணத்தை மட்டுமே அடையாளம் காணும் அடிமைத்தனம் பற்றிய கூடுதல் ஒப்பந்தம் அமலுக்கு வந்தது முதல், சிறுவர்கள் மற்றும் ஆண்களும் திருமணத்துக்குப் பலவந்தப் படுத்தப்படக்கூடும் என்று பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கட்டாயத் திருமணத்தை அதன் எல்லா வகைகளிலும் எதிர்த்துப் போராடுவதற்காகக் கட்டாயத் திருமணத்தைத் தடைசெய்யும் சட்டம், பாதிக்கப்பட்டவர்களின் பாலினத்தைப் பொருட்படுத்தாமல், அனைவருக்கும் சமமாகப் பொருந்துவதை உறுதி செய்யும் வகையில், கருதப்படுவது நல்ல நடைமுறையாகும்.

[17] 'அடிமைப்பண்பு' என்றும் அழைக்கப்படும் இத்தகைய கோட்பாடுகளின் பொருள்விளக்கங்கள் சர்வதேச சட்டங்களில் உள்ளன. அவை சுரண்டலுக்கான சூழ்நிலைகளை அடையாளம் காண உதவலாம்.

[18] குழந்தை விற்பனை, குழந்தை விபச்சாரம் மற்றும் குழந்தை ஆபாசப்படங்கள் பற்றிய குழந்தையின் உரிமைகள் ஒப்பந்தம் விருப்ப நெறிமுறை, 2171 ஐக்கிய நாடுகள் சங்கம் உடன்படிக்கை தொடர் 227, 25 மே 2000, 18 ஜனவரி 2002 சட்டவிதி 2(ஏ)-இல் அமலுக்கு வந்தது.

### உறுப்புகள் நீக்கம்

> **உதவிக்குறிப்பு:** சுரண்டலுக்காக குழந்தைகள் விற்பனை
>
> குழந்தைகள் அல்லது மழலைகள் விற்பனையில் சுரண்டல் என்பது விற்பனைக்குப் பிறகுதான் நடக்கும். தத்துக் கொடுப்பதாக விற்பனை மற்றும் வணிகம் சார்ந்த வாடகைத்தாய் ஏற்பாடுகள் போன்றவற்றைச் சேர்க்க இந்தக் கோட்பாட்டை விரிவுபடுத்துவதைப் பற்றி மாநிலங்கள் பரிசீலிக்க வேண்டும்.[19]

பணம் செலுத்தும் நன்கொடையாளர்களின் உறுப்புமாற்றுச் சிகிச்சைக்காக வர்த்தகரீதியிலான சூழலிலும், மற்றும் உறுப்புகளுடன் மனித உடல் பாகங்களையும் அகற்றுவது போன்ற கலாசார மற்றும் சடங்காச்சாரச் சூழலிலும் உறுப்புகளை அகற்றும் உத்தேசத்துடன் மனிதக் கடத்தல் நடக்கக்கூடும். சில மாநிலங்களில் ஆள்கடத்தல் தடுப்புச் சட்டம் உறுப்புகள் நீக்கத்தையும் தாண்டி, உடல் பாகங்களையும் (கலாசார மற்றும் சடங்காச்சார நடைமுறைகளையும் கைப்பற்ற), அத்துடன் செல்கள் மற்றும் திரவங்களையும் (வாடகைத்தாய் வர்த்தகத்தைக் கைப்பற்ற) சேர்த்துள்ளன. உறுப்புகள் நீக்கத்துக்காக ஆள்கடத்தல் தனித்துவமான அடையாள சவால்களை எழுப்புகிறது. ஏனெனில், தொடர்ந்து வழங்கப்படும் உழைப்பு மற்றும் சேவைகள் உள்ளடக்கிய மற்ற வகையான சுரண்டல்கள் போலில்லாமல் இந்த சுரண்டல் செயல் ஒரு முறைதான் நடக்கிறது.[20]

### சுரண்டலின் பிற வகைகள்

மாநிலங்கள் குறைந்தபட்சம், மக்களைக் கடத்துதல் நெறிமுறையின் சட்டப்பிரிவு 3 (ஏ)-இல் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ள சுரண்டலின் வகைகள் உட்பட, சுரண்டலைப் பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும். நடைமுறையில் எதிர்கொள்ளும் சுரண்டலின் மற்ற சுரண்டல் வகைகளில், வலுக்கட்டாயமாகப் பிச்சை எடுக்க வைப்பது மற்றும் போதைப்பொருள் சாகுபடி அல்லது கடத்தலில் 'கழுதைச் சுமை'யாகச் செயல்படுவது போன்ற குற்றவியல் நடவடிக்கை ஆகிய சுரண்டல்களும் அடங்கும். போதைப்பொருள் தொடர்பான குற்றங்களைக் கண்டுபிடிக்கப்படும் மற்றும் தண்டனைக்கு ஆளாகும் அபாயத்துக்கு மேல், போதைப்பொருட்களைச் சாகுபடி செய்து, தங்களுடைய உடலின் மேலே அல்லது உள்ளே வைத்துக் கடத்தும்போது, தங்கள் உயிர் மற்றும் பாதுகாப்புக்குக் கணிசமான அபாயத்துக்கு ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளாகிறார்கள்.[21]

> **உதவிக்குறிப்பு:** வெவ்வேறு வகையான சுரண்டலுக்குக் குறிப்பிட்ட குறிகாட்டிகளை வைத்தல்
>
> வெவ்வேறு வகையான சுரண்டலை அங்கீகரிக்க முதலில் பதிலளிப்பவர்களுக்கு அனுமதி கொடுக்கப் போதுமான அளவு விவரமாகவும், திட்டவட்டமாகவும் சொல்லும் குறிகாட்டிகளை அதிகாரிகளுக்கு வழங்க மாநிலங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். உதவியும், பாதுகாப்பும் வழங்கப்படும்போது, பொருள்விளக்கத்தின் மற்ற உறுப்புகளின் கூடுதல் ஆதரரங்கள் வெளிப்படையாகத் தெரியலாம். திட்டவட்டமான மற்றும் விவரமான குறிகாட்டிகளுக்கான அடிப்படையை பிரிவு 3.3 வழங்குகிறது.

[19] மேலும் பார்க்க: ஃபிலிப் ஆல்ஸ்டன் மற்றும் ஜான் டோபின், குழந்தையின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் விளக்கவுரை, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக அச்சகம், எதிர்வரும், 2015-இல் ஆன் டி. கல்லேகர், 'சட்டவிதி 35'. கட்டாய/சட்டவிரோத தத்தெடுப்பு பற்றிய விவாதம் கீழ்வரும் 2.3-இல் இன்னும் பார்க்கவும்.

[20] உறுப்புகளை அகற்றும் நோக்கத்துக்காக ஆள்கடத்தல் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, ஒரு எடுத்துக்காட்டாகப் பார்க்க: மனித செல், திசு மற்றும் உறுப்பு மாற்றம் பற்றிய உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) வழிகாட்டும் கொள்கைகள் மற்றும் இஸ்தான்புல் பிரகடனம். இவ்விரண்டும் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும்: http://www.who.int/transplantation/en/.

[21] இந்த இரு கூடுதல் படிவங்களும் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய ஆள்கடத்தல் வழிகாட்டி 2011/36/EU அத்துடன் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) கட்டாய உழைப்பு ஒப்பந்தம் மற்றும் ஜேப்படித் திருட்டு, கடைகளில் திருடுதல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் தண்டனைக்கு ஏதுவான மற்றும் குறிப்பிட்ட பண ஆதாயம் உள்ளிட்ட குற்றவியல் நடவடிக்கைகளின் சுரண்டல் வரையறுத்துள்ளபடி 'வலுக்கட்டாயமாகப் பிச்சை எடுத்தல்' கட்டாய உழைப்பு அல்லது சேவைகளில் ஒரு வகையாகும் என்று அறியப்படுகிறது. பார்க்க: மனிதர்களைக் கடத்துதலைத் தடுத்து, எதிர்த்துப் போராடுதல் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல் மற்றும் கவுன்சில் கட்டமைப்பை மாற்றும் முடிவு 2002/629/JHA, OJ L 101/1 15 ஏப்ரல் 2011 (ஐரோப்பிய ஒன்றிய (EU) ஆள்கடத்தல் வழிகாட்டி 2011/36/EU), சட்டப்பிரிவு 2(3) பற்றிய ஐரோப்பிய பாராளுமன்றத்தின் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கவுன்சில், 5 ஏப்ரல் 2011-இன் வழிகாட்டி 2011/36/EU.

# பிரிவு 2:

## கடமைகள், நலன்கள் மற்றும் சவால்கள்

## 2.1. அடையாளம் காண்பது முக்கியம் ஏன்

பாதிக்கப்பட்டோர் அடையாளம் இல்லாமல், மக்களைக் கடத்துதல் நெறிமுறையினால் வரையறுக்கப்பட்ட தடுப்பு, வழக்கு மற்றும் பாதுகாப்பு இலக்குகளை மாநிலங்கள் திறம்பட அடையமுடியாது. ஆகவே, ஆள்கடத்தலுக்கு எதிரான விரிவான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பிற நடவடிக்கைகளை நிறுவுவதில், நெறிமுறையினால் வரையறுக்கப்பட்ட, கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பகுதியாகிய, பாதிக்கப்பட்டோரை அடையாளம் காண்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அடையாளம் காணும் செயல்பாடு, பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு நபரின் அந்தஸ்தை அடையாளம் காணச்செய்து, அதன் விளைவாக, மற்றவர்களோடு மருத்துவம் மற்றும் பிற சுகாதாரச் சேவைகள், இருப்பிட வசதி, உணவு மற்றும் அடிப்படைத் தேவைகள், ஆலோசனை மற்றும் உளவியல்-சமூக பராமரிப்பு போன்ற உதவி மற்றும் பாதுகாப்புச் சேவைகளை உடனடியாக வழங்க வழிவகுக்கிறது. சில மாநிலங்களில், ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவரைச் சரிபார்த்தலானது, தற்காலிக அல்லது நிரந்தரக் குடியுரிமை போன்ற கூடுதல் நன்மைகள் மற்றும் சேவைகளை அந்த நபருக்குத் தகுதியுடையவராக்குகிறது. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாகவும், ஒழுங்காகவும் அடையாளம் காணுவதில் தோல்வியுற்றால், அது அவர்களுக்கு மேலதிக துஷ்பிரயோகம், சுரண்டல் மற்றும் அவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட உரிமைகள் மறுப்பு போன்றவற்றை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. அடையாளம் காணலுக்கு காலம் அதிகம் எடுக்க எடுக்க, பாதிக்கப்பட்டவர்களின் மீட்பும், மறுஒருங்கிணைப்பும் இன்னும் சிக்கலாகும். இந்தக் காரணத்துக்காக, பாதிக்கப்பட்டோரின் அடையாளம் காணுதலானது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு தேவையான முன்னோடியாகும்.[22]

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு தருவதற்கும் மேலாக, மாநிலங்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுவதில் மேலும் பல நலன்களை வைத்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் என்பது அவர்களுக்குப் பின்னால் இருக்கும் குற்றங்களையும் மற்றும் குற்றவியல் வலைப்பின்னல்களையும் அடையாளம் காண்பதற்கான ஒரு முக்கிய வழியாகும். எங்கே பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு, உரிய பாதுகாப்பும், ஆதரவும் அளிக்கப்படுகிறார்களோ, அங்கே அவர்கள் குற்றவியல் நீதி செயல்முறைக்க ஆதரவளிக்கும் முக்கிய சாட்சிகளாக முடியும். எங்கே பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணமுடியாமல் போகிறார்களோ, அங்கே குற்றவியல் வலைப்பின்னல்கள் தண்டனை பயமின்றி குற்றங்களைத் தொடரக்கூடும், அத்துடன் பெறுமதியான ஆதாரங்களை இழக்க நேரிடும். மனிதக் கடத்தல் போன்ற நாடுகடந்த குற்றங்கள் ஹவாலா மற்றும் ஊழல் போன்ற பிற குற்றங்களை வளரச்செய்து, பொருளாதார, சமூக முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகக் கூடும். நாட்டிலுள்ள பிற தொழிலாளர்களின் வேலை வாய்ப்புகள் மற்றும் கூலி குறைதல் அத்துடன் படிப்படியாகச் சிதைந்து போகும் நிலைமைகள் போன்ற பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கட்டாய உழைப்பைத் தடுப்பதிலும், தீர்வு காண்பதிலும் மாநிலங்களுக்கு அக்கறை இருக்கிறது. ஆகவே மனிதக் கடத்தலுக்கு எதிராகப் போராடுதலானது தனிநபர்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் போன்றவற்றை உறுதி செய்வது மட்டுமல்லாது சமுதாய ஆரோக்கியத்துக்கும் இன்றியமையாத வழிமுறையாக உள்ளது.[23]

### அட்டவணை 2: பாதிக்கப்பட்டோரை அடையாளம் காணுதலில் கடமைகள், ஆர்வங்கள் மற்றும் உதவிக்குறிப்புகள்

| கடமைகள் | ஆர்வங்கள் | உதவிக்குறிப்புகள் |
|---|---|---|
| தடுப்பு நடவடிக்கைகள் | ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதலானது மனிதக்கடத்தலைத் தடுப்பதற்கும், பின்னடையச் செய்வதற்கும் அவசியமாகும் | ஆள்கடத்தலையும் மற்றும் புலம்பெயர்வோரைக் கடத்துதல் மற்றும் உள்ளூர் வன்முறை போன்ற மற்ற வகையான குற்றத்தையும் எதிர்த்துப் போராடுதல் உள்ளிட்ட தேசிய உத்திகளையும், கடத்தப்பட்டவர்களை அடையாளம் காணுதலுடன் இணைத்துக் கொள்ளவும். |

[22] ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015-ஐப் பார்க்கவும்.
[23] ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய கொள்கைக் கையேடு, பிரிவு 1.1., பாலி செயல்முறை, 2015-ஐப் பார்க்கவும்.

| | | |
|---|---|---|
| | மனிதக்கடத்தலுக்கான மூலகாரணங்களையும் மற்றும் கடத்தலால் பாதிக்கப்படும் தனிநபர்கள் அல்லது குழுக்களையும் அடையாளம் காண்பது ஆதாரம் சார்ந்த தடுப்பு நடவடிக்கைக்கு அவசியமாகும். | சுரண்டல் கட்டத்துக்கு முன்பே ஆள்கடத்தலைத் தடுப்பதை ஆதரவளிக்கும் வகையில், அடிப்படைக் காரணங்களுக்கும் அத்துடன் தனிநபர்கள் மற்றும் குறிப்பிட்ட குழுக்கள் ஆள்கடத்தலில் பாதிக்கப்படும் பலவீனநிலைக்கும் ஏற்றவகையில் குறிகாட்டிகளை உருவாக்கவும் |
| | சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட, ஆள்கடத்தல்காரர்களின் சுயவிவரங்கள் மற்றும் குணாதிசயங்கள், வழிவகைகள், முறைபாடுகள், தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு இடையே மற்றும் அவர்களுக்குள்ளே உள்ள வழித்தடங்கள் மற்றும் இணைப்புகள், அத்துடன் அவர்களைக் கண்டறிவதற்கான சாத்தியக்கூறு நடவடிக்கைகள் உட்பட தரவு மற்றும் தகவல்கள் அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து வரும்போது, பலப்படுத்தப்படுகின்றன. | அடையாளம் காணும் செயல்பாட்டின் மூலமாகச் சேகரிக்கப்பட்ட தரவு மற்றும் தகவல்களை, ஆள்கடத்தலுக்கான மாநிலத்தின் எதிர்ச்செயல்களில் உள்ள இடைவெளியை அடையாளம் காண்பதற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட மாநில செயல்திறனாளர்களின் திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சி தேவை இவைகளை அடையாளம் காண்பதற்கும் மற்றும் தொழிலாளர் மற்றும் புலம்பெயர்பவுப் பகுதிகள் உட்பட சிறந்த கொள்கைகளை இயற்றுவதற்கும் அடிப்படையாகப் பயன்படுத்தவும். |
| விசாரணை மற்றும் வழக்குத் தொடுப்பு | பாதிக்கப்பட்டவர்களைத் திறம்பட அடையாளம் காணுவதில் பயிற்சி பெற்று, சம்பந்தப்பட்ட ஆதாரங்களைத் தொழில்புரிபவர்கள் சேகரிக்கும்போது, ஆள்கடத்தலை விசாரணை செய்து, வழக்கு தொடுக்கும் முயற்சிகள் பலப்படுத்தப்படுகின்றன. | குற்றத்தின் கூறுகள், ஆதாரங்களைச் சேகரித்தல் மற்றும் ஏற்புத்திறன், அடையாளம் காணுதலின் நெறிமுறைகள் மற்றும் அதிர்ச்சிக்கு ஆளான பாதிக்கப்பட்டோர்/சாட்சிகள், கலாசாரரீதியாகவும், மொழிரீதியாகவும் வேறுபட்ட பாதிக்கப்பட்டோர், அத்துடன் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இவர்களுடன்பணிபுரிதல்போன்ற சிறப்புக் காரணங்கள் பற்றிய பொதுவான புரிதல் அவர்களுக்கு இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் விசாரணை அதிகாரிகள் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் போன்ற மறுமொழியளிக்கும் முன்நிலைப் பணியாளர்களுக்குப் பாதிக்கப்படுவோரை அடையாளம் காணும் பயிற்சித் திட்டங்களை உருவாக்கவும். |

| | | |
|---|---|---|
| | மனிதர்களைக் கடத்துதல், கடத்தல்காரர்கள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும், ஆள்கடத்தலால் அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து விசாரணை அதிகாரிகளும், அரசு தரப்பு வழக்கறிஞர்களும் பெறுகின்றனர் | உள்நாடு மற்றும் நாடு கடந்த ஆள்கடத்தல் சூழ்நிலைகளையும், அத்துடன் எல்லா விதமான சுரண்டலுக்கான சாத்தியமுள்ள பாதிக்கப்பட்டவர்களின் (ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள்) வேறுபாட்டையும் கண்டுபிடிக்கப் பலவகையான குறிகாட்டிகளைப் பயன்படுத்துவதை உறுதிசெய்யும் விதத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னெச்சரிக்கையாக அடையாளம் காணும் செயல்முறையை உருவாக்கவும். |
| உதவி மற்றும் பாதுகாப்பு | ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதலானது, உதவி மற்றும் பாதுகாப்பு சேவைகளைப் பயனுள்ள வகையில் வழங்குவதற்கு அவசியமாகும். | ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுபவர்கள், குடிவரவு நிர்வாகச் செயல்திட்டங்களிலிருந்து அடையாளம் காணும் நடைமுறைகளைப் பிரிப்பதன் மூலம், உதவி மற்றும் பாதுகாப்பைப் பெறுவதில் தடைகளை எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில், சிறப்பு உதவி மற்றும் ஆதரவை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்குப் பொறுப்பான ஏஜென்சிகளுக்கு பரிந்துரைக்கவும்.<br><br>ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும், அவர்களுடைய வயது, இனவேறுபாடு, பாலினம், பாலியல் அமைப்பு, நாடு, இன அல்லது சமூகத் தோற்றம், அல்லது உடல்ஊனம் போன்றவற்றைப் பொருட்படுத்தாமல், சர்வதேச ச் சட்டத்துக்கு இணங்க, முறையான அடையாள நடைமுறைகள் செயல்படுத்தப் படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். |

| | | |
|---|---|---|
| | ஆள்கடத்தல்காரர்கள்மேல் வழக்கு தொடுக்க, மேலும் மனிதக்கடத்தல் நடக்காமல் தடுக்க இசைவதன் மூலம், கடத்தலால் பாதிக்கப்பட்டு உரிய பாதுகாப்பு மற்றும் உதவி பெறுபவர்கள் குற்றவியல் நீதி செயல்முறைப் பணியில் சிறப்பாக உதவிபுரிய முடியும். | முதல் சந்திப்பு தொடங்கி குற்றவியல் நீதி செயல்பாடுகள் வரை, நாடு திரும்பல் மற்றும் மறு ஒருங்கிணைப்பில் விரிவான உதவிகளை சேவை வழங்குவோர் தருகிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.<br><br>பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு பற்றிய அவர்களது உரிமைகள், ஆள்கடத்தல்காரர்களுக்கு எதிரான குற்றவியல் நீதி செயல்முறைகளுக்கு ஆதரவு தருவதில் அவர்களது சொந்த விருப்பம், தாங்கள் தெரிவிக்கும் முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை அவர்களுக்குத் தருதல் போன்றவற்றை அவர்களுக்குத் தெரிவிக்கவும். அடையாளம் காணுதல் (மற்றும் அதன் விளைவாகப் பாதுகாப்பு) என்பவை பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரிகளுக்குக் கொடுக்கும் ஒத்துழைப்பைச் சார்ந்து இல்லை என்பதற்கான உத்திரவாதத்தை அளிக்கவும |
| ஒத்துழைப்பு | பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதலில், சிறப்பு அரசு சாரா அமைப்புகள் (NGOs) மற்றும் பிற தொடர்புடைய செயல்திறனாளர்கள் உட்பட பல ஏஜென்சிகளின் ஈடுபாடு அடையாளம் காணும் வழிமுறைகளைப் பலப்படுத்த முடியும், அதன்மூலம் தடுப்பு, வழக்குத் தொடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பலப்படுத்த முடியும். | அடையாளம் காணும் செயல்பாடு என்பது பல ஏஜென்சிகள் மற்றும் மாநில அதிகாரிகள் மற்றும் சிறப்பு அரசு சாரா அமைப்புகள் (NGOs) உள்ளிட்ட அரசு சாரா செயல்திறனாளர்களுக்கு இடையே பல்வேறு ஒழுங்கு நடவடிக்கைக்கான ஒத்துழைப்பு உள்ளடங்கிய ஒரு கூட்டு செயல்முறை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.<br><br>பாதிக்கப்பட்டவரை அடையாளம் காணுவதில் ஆள்கடத்தல் போக்குதிசைகளைப் பற்றிய சீரான தகவல் பரிமாற்றம், அத்துடன் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் போன்றவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளவும். |

## 2.2. ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் தங்களை அடையாளம் காண்பித்துக்கொள்ளத் தயங்குவது ஏன் என்பதை அறிந்து கொள்ளுதல்

பாதிக்கப்பட்டவர்கள் அரிதாகவே தங்களை ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அடையாளம் காண்பித்துக் கொள்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் கடத்தல்காரர்களையே சார்ந்திருந்து, தங்கள் பாதிக்கப்பட்டவர்கள்தாம் என்பதை அடையாளம் கண்டு கொள்ளவோ அல்லது ஒப்புக்கொள்ளாமலோ இருக்கலாம். மற்றவர்கள் அவர்களைக் கடத்தியவர்களை தங்கள் சூழ்நிலையை மேம்படுத்த உதவிய கொடையாளர்கள் என்று எண்ணுகிறார்கள். அவர்கள் கடத்தல்காரர்களுக்கு உறவாகக்கூட இருக்கலாம். எடுத்துக்காட்டாக, கட்டாயத் திருமணச் சூழல்களிலோ அல்லது சுரண்டலுக்காகக் குழந்தைகள் விற்கப்படும் சந்தர்ப்பங்களிலோ, குற்றம்புரிபவர் பாதிக்கப்பட்டவரின் பெற்றோர்களாகவோ அல்லது மற்ற குடும்ப அங்கத்தினர்களாவோ இருக்கலாம் என்பது, பாதிக்கப்பட்டவர் அதிகாரிகளிடம் தெரிவிக்க முன்வருவதற்குத் தயக்கத்தை ஏற்படுத்தலாம். எங்கெல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், கடத்தல்காரர்களுக்கும் இடையே தனிப்பட்ட உறவுமுறைகள் உள்ளனவோ, அங்கெல்லாம் அதேபோல் ஆள்கடத்தல் மற்றும் சுரண்டலின் மற்ற வகைகளிலும் உண்மையாக இருக்கலாம். முன்உறவும் இல்லாத நிலையிலும், அந்த உறவுமுறை என்பது அவர்களைக் கட்டுப்படுத்தும் ஒரு வழிமுறைதான் என்பது தெரியாமலேயே, பாதிக்கப்பட்டவர்கள் கடத்தல்காரர்களிடம் தனிப்பட்ட உறவுமுறைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

அறியத்தக்கதான மற்றும்/அல்லது உண்மையான சலுகைகள் இல்லாதபோது, பாதிக்கப்பட்டவர்களில் அநேகர் அதிகாரிகளிடம் தங்களை அடையாளம் தெரிவிக்க வேண்டியிருப்பதால் அடையாளம் காண்பதில் மேலதிகச் சவால்கள் எழுகின்றன. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு நாட்டுக்குள் முறையற்ற வகையில் நுழையும் நிகழ்வுதான் இதனால் குறிப்பாக நடப்பதாகும்; அவர்கள் தங்களின் முறையற்ற அந்தஸ்தின் காரணமாக நாடு கடத்தப்படுவோம் என்று அச்சப்படலாம். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட மற்றவர்கள் ஆள்கடத்தல்காரர்களின் கட்டுப்பாட்டில் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், பல்வேறு காரணங்களுக்காக சுரண்டல் மற்றும் அவமரியாதையான சூழல்களில் இருக்கவே விருப்பப்படலாம். எடுத்துக்காட்டாக, பாதிக்கப்பட்டவர்கள் ஆள்கடத்தல்காரர்களுடன் அல்லது அந்த நிலையில் அவர்களை வைத்திருக்கும் மற்றவர்களுடன் பிணைப்பு உறவுகள் வைத்திருக்கலாம் அல்லது அவர்களுக்கு கிடைக்கும் மாற்று ஏற்பாடுகளை விட தற்போது அவர்கள் இருக்கும் சூழ்நிலைகள் நன்றாக இருப்பதாக உணரலாம். ஆள்கடத்தல்காரர்கள் இத்தகைய பயங்களையும், கவலைகளையும் பாதிக்கப்பட்டவர்களை அடக்கியாள அடிக்கடி பயன்படுத்திக் கொள்வர்.

அடையாளம் காண்பதில் உள்ள சவால்களைப் புரிந்துகொண்டு, அடையாள வழிமுறைகளை வடிவமைத்தும்போதும், செயல்படுத்தும்போதும் அவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆரம்பக் கட்டங்களில் கடத்தலால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்பட்டு முதலிலேயே அடையாளம் காணப்படாவிட்டாலும்கூட, இந்த செயல்முறையின் எந்த நிலையிலும் நபர்களைச் சரியான நடைமுறைகளுக்கு பரிந்துரைக்கப்படும் அனுமதிக்கான சாத்தியக்கூறுகள் வழங்கப்பட வேண்டும்.

### தடுப்புக்காவல் மற்றும் நாடுகடத்தலுக்கான அச்சுறுத்தல்கள்

பாதிக்கப்பட்டவர்கள் நாடற்றவர்களாக இருந்தால், அதிகாரிகளின் உதவியை நாட வேண்டாம், ஏனென்றால் கடத்தல் சூழ்நிலையின் காரணமாகக் குடிவரவு அந்தஸ்து மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளால் அவர்கள் கைதுசெய்யப்படலாம், நாடுகடத்தப்படலாம் அல்லது நிறுத்திவைக்கப்படலாம் என்று ஆள்கடத்தல்காரர்கள் பெரும்பாலும் அவர்களிடம் கூறுவர். இது அடிக்கடி நடக்கும் நிகழ்வல்ல, அவ்வாறே உண்மையாயிருந்தாலும், பாதிக்கப்பட்ட சிலருக்கு, நாடு கடத்தல் அல்லது சமுதாயத்துக்குத் திரும்புதல் அவர்களது சூழ்நிலையை மேம்படுத்தாது. ஒரு நபருக்குக் கடத்தலால் பாதிக்கப்படக்கூடிய நிலைமைகள் மாறாமல் இருந்தால், இதேபோன்ற சூழ்நிலையில் மீண்டும் விழுந்துவிடும் அபாயத்துக்கு அவர்கள் உள்ளாவார்கள். கடத்தல் நிலைமைக்கு அவர்களை ஆளாக்கிய ஆள்எடுப்போர் இன்னும் இருந்துகொண்டு, அவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது குடும்பங்களின் பாதுகாப்பு பற்றிய கவலையை உருவாக்கிக்கொண்டே இருக்கலாம்.

**உதவிக்குறிப்பு:** தடுப்புக்காவல் மற்றும் நாடுகடத்தல் பற்றிய பாதிக்கப்பட்டவர்களின் கவலைகளைத் தீர்க்க முன்வருமாறு அவர்களை ஊக்குவித்தல்

*பாதிக்கப்பட்டவர்கள் காவலில் வைக்கப்படுவதைப் பற்றிக் கொண்டிருக்கும் கவலைகளைத் தீர்க்க எந்தவிதக் குடிவரவுக் குற்றங்கள் உட்பட, கடத்தப்பட்டதன் விளைவாக அவர்கள் புரிந்த குற்றங்கள் சட்டவிரோதமில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகள் இருக்கவேண்டும். பாதிக்கப்படவர்களின் நாடுகடத்தல் பயங்களைத் தீர்க்க, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் உதவியும், பாதுகாப்பும் பெற, சென்றடைந்த நாட்டில் தங்கியிருக்க அனுமதியளிக்கும் வகையில் விசா பாதைகள் இருக்கவேண்டும்*

### ஆள்கடத்துபவர்களிடமிருந்து அச்சுறுத்தல்கள் மற்றும் பதிலடிகள் பற்றிய பயம்

பாதிக்கப்பட்டவர்களில் சிலர், தங்களை ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அடையாளம் கண்டவுடன், ஆள்கடத்தல்காரர்களிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களுக்கும், பதிலடிகளுக்கும் பயப்படுவர். ஆள்கடத்தல்காரர்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும்/அல்லது அவர்கள் குடும்ப உறுப்பினர்களுக்குத் தீங்கிழைக்கப் போவதாக மிரட்டுவர். எதிர்த்தாக்குதலிலிருந்து பாதிக்கப்பட்டவர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் பாதுகாக்க இயற்றப்பட்ட உள்நாட்டுச் சட்ட அமைப்பின் குறைபாடு பற்றிய பயங்கள், பாதிக்கப்பட்டவர்கள் முன்வருவதைத் தடுத்து நிறுத்தக்கூடும். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் வேறு அதிகார வரம்புகளில் இருக்கும்போது இந்த பயம் தீவிரமடையலாம், அத்துடன் பல்வேறு நாடுகளில் உள்ள குற்றவியல் நீதி செயல்திறனாளர்கள் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தேவைப்படுகிறார்கள்.

**உதவிக்குறிப்பு:** பாதிக்கப்பட்டவர்களையும், அவர்களது குடும்பத்தையும் பாதுகாக்க முன்வருமாறு அவர்களை ஊக்குவித்தல்

பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் பயனுள்ள பாதுகாப்புக்கு உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை வைத்திருப்பதை மாநிலங்கள் பரிசீலிக்க வேண்டும். பாதுகாப்பு தேவைப்படும் நபர்கள் வேறு மாநிலங்களில் இருந்தால், அந்த மாநிலங்களில் உள்ள குற்றவியல் நீதி செயல்திறனாளர்களின் ஒத்துழைப்பை நாட வேண்டும் அல்லது தேவைப்பட்டால், தீங்கு அபாயம் உள்ள நபர்களுக்குப் பாதுகாப்பைக் கொடுக்க விசா மற்றும் குடிவரவு பாதைகள் அவர்களுக்குக் கிடைக்கப்பெற வேண்டும்.

### அவமான உணர்வு மற்றும் அவதூறு பற்றிய பயம்

எப்போது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் அடையாளம், இரகசியத்தன்மை மற்றும் அந்தரங்கம் போன்றவை, பாதிக்கப்பட்டோர் உதவி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களால் பாதுகாக்கப்படவில்லையோ, அப்போது அவமானப்படுதல், அவதூறுக்கு உள்ளாதல் மற்றும் சமூக விலக்கல் போன்றவற்றுக்குத் தங்களை அடையாளப்படுத்துதல் கொண்டுசெல்லக்கூடும் என்று பாதிக்கப்பட்டவர்கள் அச்சப்படலாம். பாதிக்கப்பட்டவர்கள், தாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஒப்புக்கொண்டால், அவர்களின் குடும்பங்களும் மற்றும் சமுதாயங்களும் தாங்கள் தோல்வியடைந்துவிட்டதாகவும், (குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் புலம்பெயரும் சமயத்தில் சுரண்டப்பட்டிருந்த போது) அதனைத் தொடர்ந்து அவர்களுடைய குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் தடுக்கப்பட்டதாகவும் எண்ணக்கூடும் என பாதிக்கப்பட்டவர்கள் அச்சப்படலாம். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட ஆண்கள், குற்றத்தால் பலியாகி விட்டோம் அல்லது ஏமாந்துவிட்டோம் என்பதை ஒப்புக்கொள்ள குறிப்பாகத் தயக்கம் காட்டுவர்.

**உதவிக்குறிப்பு:** பாதிக்கப்பட்டவர்களை அவதூறுக்கு உள்ளாவதில் இருந்து பாதுகாக்க முன்வருமாறு அவர்களை ஊக்குவித்தல்

பாதிக்கப்பட்டவர்களின் தகவல்களின் இரகசியத்தை உறுதியாகக் காப்பாற்றுவதன் மூலமும், பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்குவதில் ஆதங்கங்களைப் புரிந்து, தீர்த்து வைக்க அரசு சாரா அமைப்புகள் (NGOs), சமுதாயங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுடனும்கூடவேலை செய்வதன் மூலமும், பாதிக்கப்பட்டவர்களின் அவமான உணர்வுகளை அல்லது அவதூறு பற்றிய பயங்களை உதவி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அகற்றுகின்றனவா என்பதை மாநிலங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

# பிரிவு 3:

## பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் முறைகள்

### 3.1.ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை யார் அடையாளம் காணமுடியும்?

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் என்பது இறுதியான, உடனடிநேர நிகழ்வாக இருப்பது மிக அரிதாகவே இருக்கிறது. ஆனால் அது பின்வரும் கட்டங்களைக் கொண்டுள்ள செயல்முறையாக இருக்கலாம்:

1. ஒரு நபர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவராக இருக்கலாம் எனப் பரிந்துரைக்கும் ஆரம்பப் பரிசோதனை. இது பாதிக்கப்பட்டவர் எனக் கருதப்படுபவர்களுடன் தொடர்புகொள்ளும் எவராலும் செய்யப்படலாம். அத்துடன் எடுக்கப்படும் முடிவுகள் உரிய அதிகாரிகளுக்குப் பரிந்துரைக்கப்படும்.
2. ஒரு நபர் ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவராய் இருக்கலாம் என்று கருதப்படுவதற்குப் போதுமான குறிகாட்டிகள் இருக்கின்றன, ஆகையால் ஆரம்ப உதவி மற்றும் பாதுகாப்புக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற உரிய அதிகாரிகளின் அனுமானம்.
3. ஒருநபர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர் என்று உரிய அதிகாரிகளால் சரிபார்ப்பு. இதன் விளைவாக, மேலும் விரிவான உதவி மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கு அந்த நபருக்கு தகுதியுடையவராகிறார். குற்றம் சாட்டப்பட்ட ஆள்கடத்தல்காரின் விசாரணை மற்றும் வழக்குடன்கூடவும் இது இணைந்து நடக்கலாம்.
4. ஆள்கடத்தல்காரரின் குற்றத்தீர்ப்பின் விளைவாக, ஒரு நபர் ஆள்கடத்தல் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர் என்பது உறுதியாகிறது. இந்தக் கட்டம் சில அதிகார எல்லைகளில் மட்டும் பயன்படுத்தப்படும். அத்துடன் 'மக்களைக் கடத்துதல்' என்ற குற்றத்துக்காக வெற்றிகரமாக வழக்குத் தொடுக்க முடியாது என்ற உண்மையினால் மட்டும் ஒரு நபர் பாதிக்கப்பட்டவர் கிடையாது என்ற அர்த்தமில்லை.

கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் பாதிக்கப்பட்டவர், அவரது குடும்பம் அல்லது மற்றவர்களின் நேரடி அறிக்கையைத் தொடர்ந்துவரும், நடந்த குற்றவிசாரணைகளின் விளைவாக இருக்கக்கூடும். ஆள்கடத்தல்காரர்களால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் திறமையைப் பெற்றிருக்கும் காவல்துறை அல்லது மற்ற செயல்திறனாளர்கள் – எல்லைப் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் துறை அதிகாரிகள் போன்றவர்கள் – தங்கள் பணியின்போது விசாரணைகளை மேற்கொண்டிருப்பதன் விளைவாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக்கூட அடையாளம் காணல் இருக்கக்கூடும். நடந்த குற்றத்தின் போது அடையாளம் காண்பதை முழுமையாக நம்புவதற்கு, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை முன்னெச்சரிக்கையாக அடையாளம் காண்பதற்கான கூடுதல் முயற்சிகள் விரும்பத்தக்கதாகும்.

உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சகாக்கள் உட்பட சமூகத்தில் உள்ள யாரும் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுவதில், குறிப்பாக ஆரம்பப் பரிசோதனைக் கட்டத்தில், பங்கெடுக்க முடியும். சிவில் சமூக அமைப்புகள், மருத்துவ நிபுணர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஆள்சேர்ப்பு ஏஜென்சிகள் உள்ளிட்ட அரசு சாரா அமைப்புகள் மதிப்புமிக்க தகவல் களஞ்சியமாய் உள்ளன என நிரூபித்திருக்கின்றன. மேலும் அவை ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்பட்டவர்களை அடையாளம் காண உரிய அதிகாரிகளிடம் பரிந்துரைக்க முக்கிய பங்குவகிக்க முடியும்.

இருப்பினும், மாநிலங்களுக்குத்தான் அடையாளம் காணுவதில் முக்கியப் பொறுப்பு உண்டு. சட்ட அமலாக்க அலுவலகர்கள் (காவல்துறையினர், அரசுதரப்பு வழக்கறிஞர்கள், நீதித்துறை அலுவலகர்கள், குடிவரவு மற்றும் சுங்க அதிகாரிகள் மற்றும் தொழிலாளர் ஆய்வாளர்கள்), சமூக சேவை ஊழியர்கள், உள்ளூர் நிர்வாகிகள், மற்றும் தூதரக மற்றும் துணைத்தூதரக அலுவலகர்கள் உட்பட அதிகாரிகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண ஒரு பங்கு வகிக்கலாம்.[24]

[24] 1967 தூதரக உறவுகள் பற்றிய வியன்னா ஒப்பந்தமானது, தூதரக அலுவலர்கள் மாநிலங்களிலிருந்து பெறும் மற்றும் அனுப்பும் தங்களுடைய கடமைகளை ஆற்றும்போது, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது தொடர்பான பல்வேறு பங்கு, உரிமைகள் மற்றும் பொறுப்புகளைக் கோடிட்டுக் காட்டுகிறது. மனிதக் கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவி செய்வது மற்றும் அவர்களைக் காப்பாற்றுவது என்பது பற்றிய இராஜாங்க மற்றும் தூதரகப் பணியாளர்களுக்கான கையேடானது விசா விண்ணப்பங்களை வகைப்படுத்தும்போது அறிந்துகொள்ள வேண்டிய குறிப்பிட்ட குறிகாட்டிகளைக் கொண்டுள்ளதால், தூதரக ஊழியர்களுக்கு இது ஒரு பயனுள்ள சாதனமாகும். பார்க்க: மனிதக்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவி செய்வது மற்றும் அவர்களைக் காப்பாற்றுவது என்பது பற்றிய இராஜாங்க மற்றும் தூதரகப் பணியாளர்களுக்கான கையேடு, பால்டிக் கடல் நாடுகளின் உள்துறைச் செயலகம், 2011.

**உதவிக்குறிப்பு:** பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுவதை மேம்படுத்த, பொதுமக்களிடத்தில் மனிதக்கடத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

**மனிதக்கடத்தல் நடக்கும் சூழ்நிலையில் பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பிரச்சாரங்களை, மாநிலங்கள் முன்னெடுத்து, அவற்றுக்கு ஆதரவளிக்க வேண்டும். இத்தகைய பிரச்சாரங்களை இலக்குப் பார்வையாளர்களுக்குப் பின்வரும் வகையில் விளக்கினால் மிகவும் நல்லது: அ) மனிதக்கடத்தல் என்றால் என்ன மற்றும் அது எப்படியிருக்கக்கூடும், மற்றும் ஆ) தனிநபர்கள் எடுக்கக்கூடிய குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் குறிப்பாக, உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரைக்கப்படும் முக்கியத் தகவல்கள் உள்ளிட்ட விவரங்களை வழங்குவது பற்றியது.**

பல மாநிலங்களில், உரிய அதிகாரிகளால் நடத்தப்படும், அனுமானம், அடையாளம்காணல் மற்றும் உறுதிப்படுத்தல் போன்றவற்றின் அதிகாரபூர்வ செயல்முறைகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற வகையில் ஒரு நபரின் அந்தஸ்தைத் தீர்மானிக்க உதவும். மேலும் இதையொத்த நிலைகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்பு அவருக்குக் கிடைக்க அனுமதி வழங்கும். சில மாநிலங்களில், இந்த செயல்முறைகளுக்கான பொறுப்பு சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கும், மற்றும் சிலவற்றில், சமூகநலத்துக்குப் பொறுப்பான மாநில அமைப்புகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதலுக்கான அதிகாரபூர்வ செயல்முறைகள் சிறப்பு அரசு சாரா அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. துணைத் தூதரக அதிகாரிகளும் கூட ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணலில் ஒரு பங்கு வகிக்கமுடியும்.

**உதவிக்குறிப்பு:** அடையாளம் காண்பதில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு பங்குதாரர்களின் திறனை வலுப்படுத்துதல்

**பயனுள்ள, பாதிக்கப்பட்டோர் அடையாளம் காணல் செயல்முறைகளில் மாநில அதிகாரிகள் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகளின் பெரும் சேர்மத்தின் பங்குகள் மற்றும் பொறுப்புகளை விளக்க, தெளிவான வழிகாட்டுதல்கள் மற்றும் செயல்முறைகளை அறிமுகப்படுத்துதல்.**

அடையாளம் காணுதலுக்கான மாநிலங்களின் அணுகுமுறை எவ்வாறாயிருப்பினும், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை விரைவாகவும், திறம்படவும் அடையாளம் காண, அதற்கான பயிற்சி பொருத்தமான பங்குதாரர்களுக்கு அவசியமாகும்.[25] அடையாளம் காணலுக்கான தரமான வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள், ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுபவர்களின் கண்ணியம் மற்றும் மனித உரிமைகளை மதிக்கவும், பாதுகாக்கவும் வேண்டும்.[26]

**உதவிக்குறிப்பு:** ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்பு கொள்ளக்கூடிய நபர்களுக்கு அடையாளப் பயிற்சி வழங்குதல்

**ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டோரை அடையாளம் காண்பதில் ஈடுபடும் முன்னணி அதிகாரிகளுக்கு முன்னுரிமை கொடுப்பது அவசியமாகும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய ஆசிரியர்கள், பத்திரிக்கையாளர்கள், மருத்துவ நிபுணர்கள், தனியார் துறை செயல்திறனாளர்கள் மற்றும் பிற சமூகத்திலுள்ளோருக்கும், ஒரு நபர் பாதிக்கப்பட்டவர் என்பதைப் பரிந்துரைக்கும் குறிகாட்டிகளை அவர்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் பயிற்சியளிக்கப்படுவதற்குப் பரிசீலிக்க வேண்டும்.**

---

[25] (E/2002/68/சேர்ப்பு 1), மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையர், வழிகாட்டுதல் 2: கடத்தப்பட்ட நபர்களை மற்றும் ஆள்கடத்துபவர்ளை அடையாளம் காணுதல், வழிகாட்டுதல் 2(3). (E/2002/68/Add.1),

[26] மேலும் பார்க்க: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015, "ஒருங்கிணைப்பு மற்றும் பல பங்குதாரர்கள் அணுகுமுறை" யில் பிரிவு 3.

## 3.2. அடிப்படைச் செயல்முறைகள்

ஆரம்பத் தொடர்புப் புள்ளியில் இருந்து நேர்முக நடத்தை வழியாக, கண்காணிப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் மூலம் மக்களை வடிகட்டி சோதனை செய்ய, அடையாளம் காணும் செயல்பாட்டின் ஒவ்வொரு கட்டமும் வாய்ப்புகளை வழங்குகிறது. அடிப்படை அடையாளம் காணல் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும், தொழில்புரிபவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் உதவி மற்றும் பாதுகாப்புத் தேவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.[27] குறிப்பிட்ட பாதுகாப்புத் தேவைகள் அடையாளம் காணப்படும்போது (எடுத்துக்காட்டாக, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் குழந்தைகள் அல்லது புகலிடம் கோருவோர்களாக இருந்தால்) உரிய பரிந்துரைகள் செய்யப்பட அனுமதிப்பதற்காக, மாநிலங்கள் அடையாளம் காணும் செயல்முறைகளை விரிவான பாதுகாப்பு நடைமுறைகளுடன் இணைத்துக் கொள்ளப் பரிசீலிக்க வேண்டும்.

முதல் தொடர்பு → ஆரம்ப நேர்காணல் → முறையான நேர்காணல்கள்

### அ. முதல் தொடர்புப் புள்ளி

முதல் தொடர்புப் புள்ளியில், ஒரு நபர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவராக இருக்கிறாரா, மேலும் அவருக்கு ஆரம்ப உதவி மற்றும் பாதுகாப்பு தேவைப்படுகிறதா என்பதைப் பரிசீலனை செய்வது ஒரு முக்கிய நோக்கமாகும்.

கண்காணிப்பு (அந்த நபருடன் உரையாடல்கள், அவரது நடத்தை, தோற்றம் அல்லது சூழ்நிலைகள்), மூன்றாம் நபரின் பரிந்துரைகளிலிருந்து பெறப்படும் தகவல்கள், அல்லது சுய அடையாளம் இவற்றின் மூலமாக பாதிக்கப்பட்டவராகக் கருதப்படுபவர் முதலில் எதிர்கொள்ளப்படும்போது, வடிகட்டி சோதனை நடக்கிறது. இருப்பினும், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் மேலே உள்ள பிரிவு 2.2-இல் விவாதிக்கப்பட்ட காரணங்களினால் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள முடியாது.

மொழி மற்றும் கலாசாரத் தடைகளினாலும், பாலினம் தொடர்பான பிரச்சினைகளினாலும் ஏற்பட்ட தகவல் தொடர்புச் சவால்களால் முதல் தொடர்புப் புள்ளி வடிகட்டி சோதனையில் தடங்கல் ஏற்படலாம். பாதிக்கப்பட்டதாகக் கருதப்படுபவரிடம் தொடர்பு வைத்துக் கொள்ளும் நபர்களுக்கத் தொடர்புப் புள்ளியில் நபர்களை வடிகட்டி சோதனை செய்யும் திறமையைப் பெறவைக்க, மொழி மற்றும் கலாசாரத் திறன்கள் அல்லது பின்னணிகள் (அல்லது அவ்வாறு இருக்கும் நபர்களுடன் உடனடியாக அணுகும் சூழல்) இருக்கிறதா என்பதை உறுதிசெய்வதன் மூலம் அத்தகைய தடைகளின் ஒரு பகுதியைத் தீர்வு காண முடியும்.

சரிபார்ப்பு உறுதியாக நடத்தமுடியாத பட்சத்தில், அந்த நபர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவராய் இருக்கலாம் என்ற அனுமானம் அவர் உதவி மற்றும் பாதுகாப்பு சேவைகளை அடையும் வசதியை அளிக்கும் பொருட்டு பயன்படுத்தப்பட வேண்டும். ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டுள்ளதாக கருதப்படுபவர்கள் எதிர்கொள்ளப்படும்போது, அவர்கள் உடனடி அபாயத்தில் இருக்கலாம் அல்லது அவசர மருத்துவ சிகிச்சை அல்லது மற்ற உதவிகள் தேவைப்படலாம்.[28] முதல் தொடர்புப் புள்ளியில், அவர்களின் உடனடி பாதுகாப்புதான் முக்கிய முன்னுரிமையாகும். பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுவர்கள் மேலும் ஏற்படும் தீங்கிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய, அவர்கள் சமூக, மருத்துவ மற்றும் உளவியல், மற்றும் பாதுகாப்பான தங்குமிட வசதிகளுக்கான சிறப்பு சேவை வழங்குபவர்களிடம் பரிந்துரை செய்யப்பட வேண்டும். மக்களின் அந்தரங்கம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதும், அத்துடன் உதவி மற்றும் பாதுகாப்புச் சேவைகளை பெறுவதற்கு அவர்களின் தெரிவிக்கப்பட்ட சம்மதம் மிக முக்கியமானதாகும்.[29]

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் துரிதமான அடையாளம் காணல் மற்றும் சிறப்பு குழந்தை சேவை வழங்குவோரிடம் உடனடியாகத் தெரிவித்தல் போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும். குழந்தைகள், குழந்தைகளைப் போலவே தோற்றம் அளிக்காமல் இருக்கலாம் மற்றும்/அல்லது தங்களுடைய வயதைப் பற்றிப் பொய் கூறலாம் என்பதால், குழந்தை உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்துக்கு ஏற்ப, குழந்தையாக இருக்கக்கூடிய ஒரு நபரை குழந்தையென நடத்துவதே ஒரு சிறந்த

[27] கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களுக்குக் கூடுதலாக, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய கொள்கைக் கையேட்டில் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பு பற்றி மேலதிக விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

[28] புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM) ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடி உதவி பற்றிய கையேடு, IOM, 2005-ஐப் பார்க்கவும்.

[29] ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை 2015-ஐப் பார்க்கவும்.

நடைமுறையாகும். அதுபோல, ஒரு குழந்தை ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவராக இருந்தால், மற்றொரு தீர்மானம் கொண்டுவரும்வரை அவர் ஒரு பாதிக்கப்பட்டவர் எனறே கருதப்படவேண்டும்.[30]

**உதவிக்குறிப்பு:** ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அடையாளம் காணுதலை வலுப்படுத்துதல்

**ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சாத்தியக்கூறு உள்ள குழந்தைகளுக்குத் துரித அடையாளம் காண செயல்படுத்தப்படும் நடைமுறைகள் மற்றும் சிறப்பு குழந்தை சேவை வழங்குவோருக்கு அடையாள நடைமுறைகள் மூலம் உடனடியாகத் தெரிவித்தல் போன்றவை பின்வரும் இரண்டை அளிக்கின்றன:**

- ***சிறுபான்மை என்ற அனுமானம், மற்றும்***
- ***பாதிக்கப்பட்ட நிலை என்ற அனுமானம்.***

## ஆ. ஆரம்ப நேர்காணல்

ஆரம்ப நேர்காணலில் ஒரு நபர் ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படுபவரா என்பதை அதிகாரிகள் சரிபார்க்க முடியும். அபாயங்களை மதிப்பீடு செய்து, குறிப்பிட்ட உதவி மற்றும் பாதுகாப்புத் தேவைகளை தீர்மானிப்பதே ஆரம்ப நேர்காணலுக்கான முக்கிய நோக்கம். ஆரம்ப நேர்காணலின் கட்டத்தில், நேர்காணலின் நோக்கம், செயல்முறை மற்றும் விளைவுகளைப் பற்றி அந்த நபரிடம் தெரிவிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அனுபவமிக்க மொழிபெயர்த்துரைப்பாளரைப் பயன்படுத்தி, அந்த நபர் புரிந்தது கொள்ளும் மொழியில் தெளிவான தகவலை வழங்க வேண்டும்.

நேர்காணல்களை நடத்துவோர், கடத்தப்பட்டதாகக் கருதப்படுவோரிடம் நம்பிக்கையையும், ஒத்துணர்வையையும் ஏற்படுத்தும் விதத்தில் நன்கு பயிற்சி பெற்றவராகவும், மற்றும் அவரிடம் இயல்பாகத் தொடர்புகொள்ளப் போதுமான சூழ்நிலையை உருவாக்குபவராகவும் இருக்க வேண்டும். பேட்டி எடுப்பவர்கள் அதிர்ச்சிநிலையைப் புரிந்துகொள்வதிலும், அவர்களுடன் நேர்காணல் செய்யும்போது, மறுபடியும் அதிர்ச்சியை ஏற்படுத்தாமல் தவிர்ப்பதிலும், சீரிய பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுடனும், அதிகாரிகளுடனும் இணைந்து, இருவருக்கும் இடையே நம்பிக்கை மற்றும் ஒத்துணர்வை ஏற்படுத்தச் செய்யும் பணிதான் மதிப்புமிக்கதாக இருக்க முடியும். சில மாநிலங்கள் ஆரம்ப நேர்காணலில் வழிகாட்டுவதற்குக் கேள்விப்பட்டியலைப் பயன்படுத்துகின்றன.[31] வெவ்வேறு மொழிகள் மற்றும் கலாசாரங்களால் ஏற்படும் சவால்களைத் தீர்ப்பதற்கும், பேட்டி கொடுப்போரின் தனிப்பட்ட குணநலன்களுக்குப் பொருத்தமான நேர்காணல் உத்திகளைப் பயன்படுத்துவதற்கும், உரிய பொருத்தமான திறன்களும் பேட்டி எடுப்பவர்களுக்குத் தேவைப்படும்.

- மொழியைப் பற்றிய பரிசீலனைகள் தொடர்பாக: பேட்டி எடுப்பவர்களுக்கு நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்தி, மொழி, இன அல்லது கலாசார வேறுபாடுகளின் தாக்கத்தைக் கருத்தில் கொள்ளும் விதத்தில், குறுகிய கால அவகாசத்தில் கிடைக்கக்கூடிய மொழிபெயர்த்துரைப்பாளர்களின் பட்டியல் உதவிபுரியும். மொழிபெயர்த்துரைப்பாளர்கள் பாரபட்சமின்றி இருக்கவும், அவர்களுடைய பங்குகள், இரகசியத் தன்மை மற்றும் பிற பிரச்சினைகள் பற்றிய விவரங்கள் அவர்களுக்கு விவரிக்கப்பட்டிருக்கவும், அத்துடன் உரிய முறையில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கவும் வேண்டும். நேர்காணலின் செயல்முறையில் பேட்டி எடுப்பவர்களின் பங்கு பற்றி பாதிக்கப்பட்டவராகக் கருதப்படுபவர்களுக்கு விளக்கப்பட வேண்டும்.
- பாலினம் மற்றும் வயது பற்றிய பரிசீலனைகள் தொடர்பாக: நேர்காணல் செய்யப்படும் நபர், அதே பாலினத்தைச் சேர்ந்த நபரால், அல்லது நபரின் முன்னிலையில் செய்யப்படுவது விரும்பத்தக்கதாகும். குழந்தைகளுக்கு (குழந்தைகளாக இருக்கக்கூடியவர்களுக்கு) பொருத்தமான (எடுத்துக்காட்டாக, அவர்கள் ஆதரவற்றவராக இருந்தால்) ஒரு காப்பாளர் நியமிக்கப்பட வேண்டும், அத்துடன் குழந்தைகளுடன் பணிபுரிய பயிற்சி பெற்ற நபர்களால் மட்டுமே அவர்கள் பேட்டி காணப்பட வேண்டும்.
- கலாசாரம் பற்றிய பரிசீலனைகள் தொடர்பாக: பேட்டி எடுப்பவர், பேட்டி கொடுப்பவரின் சமூகத்தைச் சேர்ந்தவராகவோ அல்லது அந்தக் கலாசார பின்னணியைக் கொண்டவராகவோ இருப்பது

[30] சட்டமன்ற கையேடு, ஆள்கடத்தல், பத்தி 65; ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாத்தல் பற்றிய UNICEF வழிகாட்டுதல்கள், மனித உரிமைகள் மற்றும் மனிதர்களைக் கடத்துதலுக்கான OHCHR கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல் விளக்கவுரை, OHCHR, 2010, பக்கங்கள் 162.164.

[31] எடுத்துக்காட்டாக, பாதிக்கப்படும் சூழ்நிலைகளில் புலம்பெயர்ந்த மக்களுக்கான ஆரம்ப அடையாளம் மற்றும் பரிந்துரை வகைமுறைகள் பற்றிய பிராந்திய வழிகாட்டுதல்கள் (எல்சல்வடோர், குவாதிமாலா, ஹோண்டுரஸ் போன்றவைகளுடன் இணைந்து தயாரித்தும், புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM) மற்றும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையர் (UNHCR) ஆதரவுடனும், புலம்பெயர்வுக்கான பிராந்திய மாநாட்டின் (RCM) புலம்பெயர்வுக்கான பிராந்திய ஆலோசனைக் குழுவிடம் (RCGM) கோஸ்டா ரிகாவினால் ஜுன் 2012-இல் வழங்கப்பட்டது), பக்கம் 11.

விரும்பத்தக்கதாகவும் இருக்கலாம் அல்லது விரும்பத்தகாததாகவும் இருக்கலாம். அவர் அதே கலாசாரத்தைக் கொண்டவராக இருக்கும் நபருடன் இருப்பதைச் சௌகரியமாக உணர்ந்தாலும், சில சந்தர்ப்பங்களில், எங்கே சமூகம் சம்பந்தப்பட்டுள்ளதோ அல்லது சுரண்டலுக்குத் தடையின்றி உடன்படும் நிலை உள்ளதோ, அங்கே பாதிக்கப்பட்டவர்கள் அதே சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரால் பேட்டி எடுக்கப்படும் தீவிர அபாயத்துக்குள்ளாகலாம்.

ஒரு குறிப்பிட்ட நேர்காணலுக்கு எது பொருத்தமானது என்பதைத் தீர்மானிக்கப் பேட்டி கொடுப்பவரிடம், அவருடைய விருப்பங்கள் மற்றும் எந்த அளவு முடியுமோ மற்றும் எந்த அளவுக்குப் பொருத்தமானதோ அந்த அளவுக்கு அத்தகைய விருப்பங்களுக்கு இடமளித்தல் போன்றவற்றைக் கலந்து ஆலோசிக்க வேண்டிய தேவையாயிருக்கும்.

**உதவிக்குறிப்பு:** பாதிக்கப்பட்டோர் நுண்ணுணர்வை மதிக்கும் நேர்காணல் உத்தியைப் பயன்படுத்த ஆதரவளித்தல்

**மொழி, பாலினம், வயது மற்றும் கலாசாரக் காரணங்களைத் கருத்தில் கொள்ளத் தேவையான திறன்களை நேர்காணலை நடத்தும் நபர்கள் கொண்டிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தவும். முடிந்தவரை, பேட்டி கொடுக்கும் தனிநபரைக் கலந்தாலோசனை செய்து, அவரது விருப்பங்களைக் கேட்டு, அத்தகைய விருப்பங்கள் எந்த அளவுக்கு பொருத்தமானதோ அந்த அளவுக்கு இடமளிக்கவும்.**

ஓர் ஆரம்ப நேர்காணலை நடத்தும்போது, அந்த நபரின் அந்தஸ்து மற்றும் பண்புகளைப் பொருட்படுத்தாமல், கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய சில முக்கியக் கருத்துக்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, புகலிடம் தேவைப்படும், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து வரும் புகலிடக் கோரிக்கைகளைப் பெற்று, கருத்தில் கொள்ளும் நடைமுறைகளை அடையாளச் செயல்முறைகளோடு சேர்ப்பது பயனுள்ளதாகும்.[32] புகலிட அதிகாரிகள் (அல்லது தேசிய புகலிட அமைப்பு இல்லாத சில நாடுகளில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையர் (UNHCR)), பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் செயல்முறைகளின் போது, அவர்களுடைய பிறந்தநாட்டில் துன்புறுத்தலோ அல்லது கடுமையான தீங்கோ அவர்களுக்கு ஏற்படுவதற்கான அபாயம் இருப்பதற்குரிய அறிகுறி ஏதாவது தெரிவித்தால், புகலிட அந்தஸ்து வழங்கும் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அதுபோல், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கான அறிகுறிகளைக் காண்பிக்கும் புகலிடம் கோருவோரை மற்றும் அகதியரை ஆள்கடத்தல் தடுப்பு அதிகாரிகள் வடிகட்டி சோதனை நடத்த வேண்டும். புகலிட அதிகாரிகளிடம் அகதி என்ற வகையில் சர்வதேசப் பாதுகாப்பு கோர விரும்பும் தனிநபர்களின் பரிந்துரையையும், அத்துடன் பொருத்தமான கடத்தல் தடுப்பு அதிகாரிகளிடம் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாய் இருக்கக்கூடிய புகலிடம் கோருவோர் மற்றும் அகதியர் பரிந்துரையையும் அனுமதிக்கத் தேவையான பரிந்துரை வழிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த இரண்டு சூழ்நிலைகளிலும், வம்சாவளி நாடுகளில் உள்ள அதிகாரிகளுடனான ஒப்பந்தத்தினாலும் புகலிடம் கோருவோர் அல்லது அகதியராய் இருக்கக்கூடிய நபர்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லையென அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

**உதவிக்குறிப்பு:** புகலிடம் கோருவோரின் உரிய பரிந்துரையை அடையாளம் காணும் செயல்முறைகள் அனுமதிக்க உறுதிசெய்தல்

**அடையாளம் காணுவதற்காக, ஒரு நபர் புகலிடம் கோரி விண்ணப்பித்திருந்த அல்லது ஒரு அகதி என்று நம்பப்படுவதற்கான காரணம் உள்ள வம்சாவளி நாட்டின் இராஜாங்க பிரதிநிதிகளிடம் மாநிலங்கள் தொடர்பு கொள்ளக்கூடாது.**

## இ. முறையான நேர்காணல்கள்

வழங்கப்படும் உதவி மற்றும் பாதுகாப்பு சேவைகளைச் சீர்படுத்த, வாய்ப்புகளை அடையாளம் காணக்கூடிய சிறப்புத் தேவைகளின் அடிப்படையில் முறையான நேர்காணல்கள் வழங்குகின்றன. முறையான நேர்காணல் நடக்கும்போது, ஆதாரங்களை வழங்குகின்ற அவர்களது வேதனையில் இருந்து மீட்க உதவும் வகையில் 'சிந்தனைக்கான நேரத்தை' அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவது ஒரு சிறந்த நடைமுறையாகும்.[33] பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒருவரின் நிலைமை மற்றும் தேவைகளின் அடிப்படையில், சிந்தனைக்கான நேரத்துக்கு முன்போ அல்லது பின்போ,

[32] மக்களைக் கடத்துதல் நெறிமுறை சட்டவிதி 14-ஐப் பார்க்கவும். மேலும் பரிந்துரைக்கப்பட்ட மனித உரிமைகள் மற்றும் மனிதக் கடத்துலுக்கான வழிகாட்டுதல்கள் (E/2002/68/சேர்க்கை 1). மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையர் வழிகாட்டுதல் 2(7)-ஐப் பார்க்கவும்.

[33] சிந்தனைக்கான நேரம் பற்றி மேலதிக விவரங்களுக்கு, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015.

பாதிக்கப்படும் சாத்தியமுள்ளவர் ஆரம்ப உதவியும், பாதுகாப்பும் பெற்றபிறகு, எப்போது பகிர்ந்துகொள்ள முடியுமோ அப்போது முறையான நேர்காணல்களை ஆரம்பிக்கலாம்.

உதவி மற்றும் பாதுகாப்பு சேவைகள் வழங்கப்பட்டபின், புலனாய்வு அல்லது வழக்கு விசாரணை நடத்தும் நோக்கங்களில் கூடுதல் நேர்காணல்கள் நடத்தப்படலாம். ஒரு நபர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவரா இல்லையா என்பதை உறுதி செய்யும் நோக்கத்துக்காக தகவல்கள் சேகரிக்கப்படக்கூடும். தங்களைப் பேட்டி எடுப்பதற்கும், பேட்டி எடுக்கும் சமயத்தில் எந்தவொரு காணொளி (வீடியோ) அல்லது ஒலிப்பதிவு (ஆடியோ) செய்வதற்கும், மக்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும், பேட்டியின் நோக்கம் மற்றும் தாக்கங்கள் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.[34] பேட்டியும், எழுதப்பட்ட நகல்களும் அல்லது பதிவுகளும், பேட்டி கொடுப்பவர் மற்றும் அவரது அந்தரங்க உரிமையைப் பாதுகாக்க, இரகசியமாக வைக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் விளக்கங்கள் ஏன் மாறுபடுகின்றன என்பதை அறிந்து கொள்ள பேட்டி எடுப்பவர் சிறப்புப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும், மேலும் வெவ்வேறு வயது கொண்ட, வெவ்வேறு மொழிகள் பேசும், பல்வேறு கலாசாரங்களிலிருந்து வரும் மற்றும் அதிர்ச்சிக்குள்ளாயிருக்கக்கூடிய மக்களுடன் வேலை பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும்.[35]

செயல்முறையின் இந்தக் கட்டத்தில் பாதிக்கப்பட்டவரிடமிருந்து அறிக்கை பெறப்படலாம். இந்தக் கட்டத்தில் பாதிக்கப்பட்டவரின் அறிக்கை தொடர்பான உண்மைகள் அல்லது தகவல்களை உறுதிப்படுத்த மற்ற ஆதாரங்களும் சேகரிக்கப்பட வேண்டும். ஒரு தனிநபருக்கான பாதுகாப்புத் திட்டம், நேர்காணலில் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட வேண்டியதிருக்கலாம். சிறப்பு சேவைகள் வழங்குவோரின் பரிந்துரைகள் தேவைப்படலாம்.

மேலே உள்ள பிரிவு 2.2-இல் கூறப்பட்டபடி, பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரிகளை நம்புவதற்குத் தயக்கம் இருக்கலாம். பாதிக்கப்பட்டவர்களை பேட்டி எடுப்பது சவாலாக இருக்கக்கூடும், மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் உணர்ச்சிப்பூர்வமான மன அழுத்தம் மற்றும் பதற்றம் ஏற்படுவதைத் தவிர்க்க நுண்ணுணர்திறனும், பொறுமையும் தேவைப்படும். பேட்டி எடுப்பவர் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் வளர்க்கக் கவனம் செலுத்த வேண்டும். கூடுமானவரை, பேட்டி எடுப்பவர் பாதிக்கப்பட்டவர்களை அதிர்ச்சியடையச் செய்யும், அவமானப்படுத்தும் மற்றும்/அல்லது பலமிழக்கச் செய்யும், அல்லது தெரிவிக்க முடிவெடுக்கும் தன்னம்பிக்கையை இழக்கச்செய்யக்கூடிய அனுபவங்களை அவர்களுக்கு நினைவுபடுத்துவதைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். அவ்வாறு செய்வது பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் தீங்கை விளைவித்து, ஆதாரங்களைச் சேகரிப்பதில் தடங்கல் ஏற்படுத்தி, குற்றவியல் நீதி செயல்முறையில் தொடர்ந்த ஒத்துழைப்பு தருவதிலிருந்து அவர்களைப் பின்வாங்க வைக்கும்.

## 3.3. கடத்தலுக்கான குறிகாட்டிகள்

பல மாநிலங்களில், ஆள்கடத்தலின் சாத்தியமான சூழ்நிலைகளைக் கண்டறிய ‘குறிகாட்டிகளின்’ பொதுவான தொகுப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய குறிகாட்டிகள் பயிற்சிக்கு மற்றும் குறிப்பிட்ட பங்குதாரர்களின் (எடுத்துக்காட்டாக, மருத்துவ நிபுணர்கள் அத்துடன் காவல்துறை, குடிவரவு மற்றும் சுங்க அதிகாரிகள்) திறன் வளர்ப்புக்கு உபயோகமான கருவிகளாக இருக்கமுடியும், மற்றும் சாத்தியமான ஆள்கடத்தல் சூழ்நிலைக்கான குறிப்பிட்ட அம்சங்கள் தொடர்புள்ளதாக இருக்கலாம் (எடுத்துக்காட்டாக, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவரின் இணக்கத்தைப் பெற ஆள்கடத்தல்காரரால் பயன்படுத்தப்படும் வழிமுறைகள்) அல்லது ஒரு குறிப்பிட்ட வகையான சுரண்டலுக்குத் (எடுத்துக்காட்டாக, கட்டாய உழைப்பு) தொடர்புடையதாக இருக்கலாம். நடைமுறையில், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டவுடன் அடையாளம் காணப்படுகிறார்கள் என்பதால், சுரண்டல் கட்டம் தொடர்பான குறிகாட்டிகள் மிகவும் நம்பகத்தன்மை கொண்டவைகளாகக் கருதப்படுகின்றன.

[34] பொதுவாக, குழந்தைகள் சட்ட ஒப்புதல் வழங்க முடியாது. குழந்தைகளிடம் எந்த நேர்காணல்செய்வதற்கு முன்பு, பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடமிருந்து ஒப்புதல் பெறும் நடைமுறைகளை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

[35] குற்றவியல் நீதி தொழில்புரிவோர்க்கான மனிதக் கடத்தல் எதிர்ப்பு கையேடு, தொகுதி 8: சாத்தியமுள்ள சாட்சிகளாய் இருக்கக்கூடிய ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை நேர்காணல் செய்தல், UNODC, 2009-ஐப் பார்க்கவும்.

**உதவிக்குறிப்பு:** *சீர்தூக்கும் குறிகாட்டிகளைக் கருத்தில் கொள்ளல்*

**சில வகையான தகவல்களுக்கு முன்னுரிமை அளிக்க, பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதில் யார் பொறுப்பானவர்களோ அவர்களுக்கு உதவும் பொருட்டு சீர்தூக்கும் குறிகாட்டிகளை மாநிலங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட அணுகுமுறையானது ஒவ்வொரு குறிகாட்டியையும் வலுவானது, நடுத்தரமானது அல்லது பலவீனமானது எனப் பிரித்துத் தகுதிச்சான்றளிக்கிறது. அதில் ஒரே குறிகாட்டி குழந்தைகளுக்கு பலமானதாகவும், வயது வந்தோர்க்கு நடுத்தரமானதாகவும் அல்லது பாலியல் சுரண்டலுக்கு வலுவானதாகவும் மற்றும் உழைப்பு சுரண்டலுக்கு பலவீனமானதாகவும் விதிமுறை வகுக்கிறது.**

இருப்பினும், குறிகாட்டிகளின் இயல்பான வரையறைகளை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். வெவ்வேறு வகைகளில் மக்கள் கடத்தப்படுவதையும், வெவ்வேறு சூழல்களில் அவர்கள் சுரண்டப்படுவதையும் கருத்தில் கொண்டு, சில குறிகாட்டிகள் ஆள்கடத்தலைக் குறிப்பாகத் தெரிவிப்பதில் எப்போதும் மற்றவைகளை விட வலுவானதாக இருக்கும். வேறுவகையில் கூறுவதானால், ஆள்கடத்தலின் ஒரு வழக்கில், நிர்ப்பந்தமான குறிகாட்டியாய் இருக்கக்கூடியது மற்றொன்றில் முழுவதுமாக இல்லாது போகலாம் அல்லது பொருத்தமற்றதாக இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, ஆயுதமேந்திய காவலரின் கீழ், குறைவான ஊதியத்துக்கு ஒவ்வொரு நாளும் கூடுதல் நேரம் வேலை பார்க்கும் ஒரு நபர், பாஸ்போர்ட் இல்லாமல் எல்லைகடந்து கொண்டுசெல்லப்படும் குழந்தையைவிட ஆள்கடத்தலில் ஒரு வலுவான குறிகாட்டியாகும். சில குறிகாட்டிகள் பிற குற்ற வகைகளையோ அல்லது காட்சிகளையோ குறிப்பாகத் தெரிவிக்கும், அத்துடன் எந்த குறிகாட்டியும் இருப்பதோ இல்லாமல் இருப்பதோ மனிதக்கடத்தல் நடைபெற்று வருகிறதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் முடிவானதாக இல்லை.[36] கூடுதல் வரையறை என்னவென்றால், ஆள்கடத்துவர்கள் குறிகாட்டிகளுக்கேற்ப தங்களை மாற்றிக்கொண்டு, அதற்கேற்ப செயல்படலாம். எடுத்துக்காட்டாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது பயணம் மற்றும் அடையாள ஆவணங்களைப் பயன்படுத்தக் கொடுப்பதன் மூலமாக அதிகாரிகளுக்கு சந்தேகம் எழாதவகையில் செய்வது. இத்தகைய வரையறைகளைக் கணக்கில் கொண்டு, வெவ்வேறு 'வகை'களின் கலவையிலான குறிகாட்டிகள், ஒரு வகையை மட்டும் நம்புவதை விட அதிகமான புரிதலை அளிக்கும். மேலும் குறிகாட்டிகள் கடத்தலுக்கான ஆதாரம் கிடையாது, ஆனால் உதவி மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவான கருத்தை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்த முடியும்.

பின்வரும் மாதிரி குறிகாட்டிகள் அடங்கிய முழுமையல்லாத பட்டியல்கள், மக்களைக் கடத்துதல் நெறிமுறையில் பட்டியலிடப்பட்டுள்ள வெவ்வேறு சுரண்டல் வகைகளுக்கு எதிராக வழங்கப்படுகின்றன. அவை மேற்கூறிய வரையறைகளின் சூழலில் பார்க்கப்பட வேண்டும். நெறிமுறையில் சுரண்டல் வகைகளின் பட்டியல் முழுமையல்லாததாய் இருப்பதால். நடைமுறையில் அதிக அளவில் எதிர்கொள்ளும் மற்ற வகையான சுரண்டலின் குறிகாட்டிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கீழ்வரும் குறிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'நபர்' என்பவர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படுபவர்தான் ஆனால் கடத்தப்படும் சாத்தியமுள்ளவர் அல்ல.

**உதவிக்குறிப்பு:** *சூழலுக்கேற்ற வகையில் குறிகாட்டிகளை மாற்றியமைத்தல்*

**அதிகாரிகள் தங்களுடைய வேலையின்போது எதிர்கொள்ளும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில், தங்களை மாற்றிக்கொள்ள, குறிகாட்டிகளின் பட்டியல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மாறுகின்ற ஆள்கடத்தல் போக்குகளுக்குத் தொடர்ந்து உகந்ததாய் இருக்கிறதா என்பதை உறுதி செய்யும்வகையில் மாநிலங்கள் குறிகாட்டிகளை அடிக்கடி புதிப்பித்துக்கொள்ள வேண்டும்.**

## முக்கிய பொதுவான சுரண்டலுக்கான குறிகாட்டிகள்

கீழேயுள்ள குறிகாட்டிகள் எந்தவகையான சுரண்டலுக்கும் பயன்படுத்தப்படலாம். சில குறிகாட்டிகள் சுரண்டலுக்கான அறிகுறிகளைச் சுட்டிக்காட்டும், மற்றவை பாதிக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படுபவர்கள் மீது ஆள்கடத்தல்காரர்கள் கொண்டுள்ள கட்டுப்பாட்டின் அறிகுறிகளைப் பரிந்துரைக்கும்:

[36] குற்றவியல் நீதி தொழில்புரிவோர்க்கான மனிதக் கடத்தல் எதிர்ப்பு கையேடு, UNODC/UN.GIFT, 2009, தொகுதி 2-ஐப் பார்க்கவும். அத்துடன் தேசிய பரிந்துரை வழிமுறைகள்: ஒரு நடைமுறைக் கையேடு, OSCE, 2004, பக்கம் 61-ஐப் பார்க்கவும்.

- அந்த நபர் இந்தச் சூழ்நிலைக்கு வலுக்கட்டாயமாக/வற்புறுத்தித் திணிக்கப்பட்டுள்ளார் அல்லது இருத்தி வைக்கப்பட்டுள்ளார்
- அந்த நபர் சூழ்நிலையின் தன்மை/இடத்தைப் பற்றி ஏமாற்றப்பட்டிருக்கிறார்
- அந்த நபரின் வேலை நாட்கள் அல்லது மணி நேரங்கள் கூடுதலாக உள்ளன
- அந்த நபரின் வாழ்க்கை அல்லது வேலை நிலைமைகள் மனிதாபிமானமற்றதாக மற்றும்/அல்லது தரம் குறைவானதாக உள்ளன
- அந்த நபர் மற்றவர்களின் கட்டுப்பாட்டின் கீழ்/மற்றவர்களைப் பெரிதும் சார்ந்து உள்ளார்
- அந்த நபர் அச்சுறுத்தல்களுக்கு அல்லது வன்முறைக்கு ஆளாகியுள்ளார்
- அந்த நபர் தன்னுடைய வயதுக்குப் பொருத்தமில்லாத சூழ்நிலையில் உள்ளார்

### சுரண்டலின் குறிப்பிட்ட வகைகளுக்கான முக்கிய குறிகாட்டிகள்

பின்வரும் குறிகாட்டிகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் நெறிமுறையில் பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட வகைகளுடன் தொடர்புடையது. நெறிமுறையில் பட்டியலிடப்பட்டுள்ள சுரண்டலின் வகைகள் முழுமையல்லாதபடியால், நடைமுறையில் அதிக அளவில் எதிர்கொள்ளும் சுரண்டலின் வேறு சில வகைகளுக்கான குறிகாட்டிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மற்றவர்களின் விபசாரம் பற்றிய சுரண்டல் மற்றும் பிற பாலியல் சுரண்டலின் வகைகள்
அட்டவணை 1 (பிரிவு 1.1)-இல் குறிப்பிட்டுள்ளபடி, பாலியல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிகாட்டிகள் யார் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்டவர்கள் என்பதை அடையாளம் காண்பதற்குப் பயனுள்ளதாக இருக்கக்கூடும்:

- அந்த நபர் சேவை வாடிக்கையாளர்களிடம் குறிப்பிட்ட பாலியல் செயல்களைச் செய்வதை அல்லது பாதுகாப்பற்ற முறையில் உடலுறவில் ஈடுபடுவதை மறுக்க முடியாது
- அந்த நபர் வாடிக்கையாளர்களிடமிருந்து நேரடியாகப் பணம் பெறமுடியாது/முதலாளிகளுக்கு அல்லது இடைத்தரகர்களுக்கு வாடிக்கையாளர்களால் தரப்படும் கட்டணத்திலிருந்து ஒரு சிறிய பகுதியைத்தான் பெறமுடியும்
- அந்த நபர் குறிப்பிட்ட வகைக் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்த அல்லது பயன்படுத்தாமல் இருக்க கட்டாயப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளார்/ வற்புறுத்தப்பட்டுள்ளார்
- அந்த நபர் மருத்துவ/கருத்தரிப்புச் சோதனைகளைச் செய்ய கட்டாயப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளார்/ வற்புறுத்தப்பட்டுள்ளார்
- அந்த நபர் குறைந்த வயதுடையவர்

**உறுப்பு அகற்றும் நோக்கத்தில் ஆள்கடத்தல்**
மருத்துவச் சூழலில், உறுப்பு மாற்று சிகிச்சைக்காக உறுப்புகள் இனிமேல் அகற்றப்படவுள்ள அல்லது ஏற்கனவே அகற்றப்பட்ட சூழ்நிலைகளில் பின்வரும் குறிகாட்டிகள் முதன்மையாகத் தொடர்பு கொண்டுள்ளன. அவைகளுக்கு கலாசாரம் மற்றும் சடங்காச்சார நோக்கங்களுக்காக உறுப்பை அகற்றுதல் என்பதுடனான தொடர்பு குறைவாகவே இருக்கும்:

- அந்த நபர் உறுப்பை அகற்றுவதற்கு ஒப்புதலளிக்கக் கட்டாயப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளார்/ வற்புறுத்தப்பட்டுள்ளார்
- அந்த நபர் உறுப்பை அகற்றுதல் தொடர்பான நடைமுறைகள் அல்லது பெறப்போகும் இழப்பீடு பற்றி ஏமாற்றப்பட்டுள்ளார்
- அந்த நபருக்கு எங்கே அல்லது எப்போது உறுப்பு மாற்றுச் சிகிச்சை நடக்கவுள்ளது என்பது தெரியாது
- அந்த நபருக்கு உறுப்பு மாற்றச் சிகிச்சையின் செயல்முறைகள் மற்றும் அது சம்பந்தப்பட்ட அபாயங்கள் பற்றி எதுவும் புரியாது
- ஒரு மூன்றாம் தரப்பு தரகர் இருப்பதைப் போலத் தோன்றுகிறது
- பெறுவதற்கு விழைபவர் அந்த நபருடன் வெளிநாடு பயணம் செல்வதை உள்நோக்கமாகக் கொண்டுள்ளதைப் போல அறிகுறிகள் உள்ளன

**உள்ளூரில் அடிமையாக்கும் நோக்கத்துக்காக ஆள்கடத்தல்**

- அந்த நபர் மோசமான தரத்தில்/தரக்குறைவான உணவு பெறுகிறார் மற்றும் ஊட்டச்சத்தின்மைக்கான அறிகுறிகள் தென்படுகின்றன
- அந்த நபர் கூடுதல் நேரம் வேலை செய்கிறார்
- அந்த நபருக்குத் தனியான இடம் கிடையாது அல்லது தனியான இடம் போதுமானதாக இல்லை
- அந்த நபர் தனிமைச் சிறைப்படுத்தப்பட்டுள்ளார் அல்லது அவருக்குச் சமூகத் தொடர்பு மறுக்கப்பட்டுள்ளது மற்றும்/அல்லது அவருடைய முதலாளி இல்லாமல் வீட்டை விட்டு வெளியேற முடியாது
- அந்த நபர் அவமானம், துஷ்பிரயோகம், அச்சுறுத்தல்கள், வன்முறை மற்றும்/அல்லது தாக்குதல்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்
- அந்த நபர் ஆட்சேர்ப்புக்கான கட்டணம் செலுத்துகிறார்
- அந்த நபர் குறைந்த வயதுடையவர்

**கட்டாயத் திருமணம், அடிமைத் திருமணம் அல்லது பால்ய விவாகம் போன்ற நோக்கங்களுக்காக ஆள்கடத்தல்**

- திருமணம் நடைபெறுவதற்காக பணம் அல்லது மற்ற 'பரிசுகள்' மூன்றாம் தரப்பிடம் கொடுக்கப்பட்டன
- திருமண ஒப்பந்தமானது திருமண வீட்டார் இல்லாமல் மற்றவர்களால் கலந்து பேசப்பட்டது மற்றும்/ அல்லது அவர்களது ஈடுபாடு அல்லது உடன்பாடு இல்லாமல் பேசப்பட்டது
- அந்த நபர் உழைப்பு, உள்ளூர் அடிமைத்தனம் அல்லது பாலியல் சுரண்டல் போன்ற சூழ்நிலைகளில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்
- அந்த நபர் கன்னிமைத்தன்மை பரிசோதனை செய்துள்ளார்/செய்யப்பட உள்ளார்
- அந்த நபரின் உறவினர்கள் திருமணத்துக்காகக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள்
- அந்த நபருக்கு மன அழுத்தம், சுய தீங்கு, சமூகத்தில் தனிமைப்படுத்தல் அல்லது போதைப்பொருள் நுகர்வு போன்றவற்றுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன
- குடும்ப வேறுபாடு, வன்முறை அல்லது கொடுமை போன்றவற்றுக்கான அறிகுறிகள் உள்ளன
- அந்த நபர் குறைந்த வயதுடையவர்

**பிச்சை எடுத்தல் மற்றும் குற்ற நடவடிக்கைகளில் சுரண்டல் என்ற நோக்கத்திற்காக ஆள்கடத்தல்**

- அந்த நபர் தேவையான அளவுக்கு வசூல் செய்யாவிடில் அல்லது திருடிக் கொண்டுவராவிடில் தண்டிக்கப்படுகிறார்
- அந்த நபர் அதே பணிகளைச் செய்யும் மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்கிறார்
- அந்த நபர் செயல்பாடுகளின் நோக்கத்தையோ அல்லது அவர்களின் சட்டவிரோதத் தன்மையையோ புரிந்து கொள்வதில்லை
- அந்த நபர் குறைந்த வயதுடையவர், வயதானவர் அல்லது உடல் ஊனமுற்றவர்

மேலேயுள்ள குறிகாட்டிகள் சம்பந்தப்பட்ட சுரண்டலின் குறிப்பிட்ட வகைகளுடன் தொடர்புடையதாகவும் அத்துடன் கூடுதலாகக் கீழே கொடுக்கப்பட்டவைகள் சுரண்டலின் அனைத்து வகைகளுடன் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கலாம்.

**குற்ற நடவடிக்கைகளில் சுரண்டப்பட்ட ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுவதில் உள்ள சவால்கள்**

**குற்ற நடவடிக்கைகளில் சுரண்டப்படும் நபர்கள், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதைக் காட்டிலும், குற்றவாளிகள் என்று தவறாக அடையாளம் காட்டப்படலாம். இந்த அபாயத்தைக் குறைக்க, ஒரு நபரைக் கட்டுப்படுத்தி, அவரைச் சுரண்டப்படக்கூடிய சூழ்நிலையில் வைத்திருக்க ஆள்கடத்தல்காரர்கள் பயன்படுத்தும் 'வழிமுறைகள்' மற்றும் பொருத்தமற்ற வகையில் சுரண்டலுக்கான பாதிக்கப்பட்டோரின் ஒப்புதல், போன்றவற்றில் அதிகாரிகள் தேவையான அளவு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.**

## சந்தேகத்திற்கு உள்ளான ஆள்கடத்தல்காரரால் 'வழிமுறைகள்' பயன்படுத்தப்படுதல்

கீழேயுள்ள குறிகாட்டிகள் எந்தவகையான சுரண்டலுக்கும் பயன்படுத்தப்படலாம். சில குறிகாட்டிகள் சுரண்டலுக்கான அறிகுறிகளைச் சுட்டிக்காட்டும், மற்றவை பாதிக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படுபவர்கள் மீது ஆள்கடத்தல்காரர்கள் கொண்டுள்ள கட்டுப்பாட்டின் அறிகுறிகளைப் பரிந்துரைக்கும்:

மக்கள்கடத்தல் நெறிமுறையினால் வரையறுக்கப்பட்ட 'வழிமுறைகள்' ஆள்கடத்தலின் குறிகாட்டிகளாகும். பாதிக்கப்பட்டவர்கள் குழந்தைகளாக உள்ள நெறிமுறையின் அடிப்படையில், 'வழிமுறைகளைப்' பயன்படுத்துதல் ஆள்கடத்தலின் தேவைப்படும் கூறு இல்லை என்றாலும், அவற்றைப் பயன்படுத்துவது ஆள்கடத்தல் அல்லது தொடர்புடைய சுரண்டலைச் சுட்டிக்காட்டுவதாகவும் இருக்கலாம். 'வழிமுறைகள்' என்பது ஆள்கடத்தல் செயல்முறையில் ஆள்சேர்ப்பு, போக்குவரத்து, இடமாற்றம், ஆள்பதுக்கல் அல்லது ஆட்களை அழைத்தல் முதல், சுரண்டல் கட்டத்தில் அவர்களைக் கட்டுப்படுத்துதல் வரை எந்தக் கட்டத்திலும் பயன்படுத்தப்படலாம், அத்துடன் பாதிக்கப்பட்டோரை எந்தவிதமான சுரண்டலுக்கும் ஆட்படுத்தப் பயன்படுத்தப்படலாம். சில 'வழிமுறைகளைப்' பயன்படுத்துவது மற்றவைகளைப் பார்க்கிலும் அடையாளம் காண எளிதானது (எடுத்துக்காட்டாக, பலத்தைப் பிரயோகப்படுத்துதல்) என்றாலும், சில நேரங்களில் 'வழிமுறைகள்' நுட்பமானவை மற்றும் தீர்மானிக்கக் கடினமானவை (எடுத்துக்காட்டாக, அதிகார துஷ்பிரயோகம் அல்லது பலவீனமான நிலை).

பின்வரும் முழுமையல்லாத பட்டியல், ஆள்கடத்தல் குற்றத்தின் இந்தக் கூறை உறுதிப்படுத்த ஆள்கடத்தலுக்குச் சாத்தியமான அறிகுறிகளை வழங்குகிறது:

அச்சுறுத்தல்
- அந்த நபர் (அல்லது அவரது குடும்பம், நண்பர்கள் அல்லது சமூகம்) அச்சுறுத்தப்படுகிறார்
- அந்த நபர் (அல்லது அவரது குடும்பம், நண்பர்கள் அல்லது சமூகம்) பலத்தைப் பயன்படுத்தி அச்சுறுத்தப்படுகிறார்
- அந்த நபர் (அல்லது அவரது குடும்பம், நண்பர்கள் அல்லது சமூகம்) மோசமடைந்துவரும் வாழ்க்கை அல்லது வேலைச் சூழல்களைப் பயன்படுத்தி அச்சுறுத்தப்படுகிறார்
- அந்த நபர் (அல்லது அவரது குடும்பம், நண்பர்கள் அல்லது சமூகம்) அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படப் போவதாக அச்சுறுத்தப்படுகிறார்
- அந்த நபர் பலத்தைப் பயன்படுத்தி அச்சுறுத்தப்படுகிறார்

பலத்தைப் பிரயோகித்தல்
- அந்த நபரிடம் உடல்ரீதியாக தீங்கிழைக்கப்பட்ட அடையாளங்கள் தென்படுகின்றன
- அந்த நபரிடம் உள்ளரீதியாக மற்றும் உளவியல்ரீதியாக கேடுவிளைவிக்கப்பட்ட அறிகுறிகள் தென்படுகின்றன
- அந்த நபரிடம் பாலியல் வன்முறை மற்றும்/அல்லது கற்பழிப்புக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன

நிர்ப்பந்தம்
- அந்த நபருக்கு குடும்பம் அல்லது பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன
- அந்த நபருக்கு குற்றம் புரிந்த வரலாறு உண்டு அல்லது அவர் வேறுவகையில் அதிகாரிகளுக்கு பரிச்சயமானவர்
- அந்த நபர் முறையற்ற புலம்பெயர்வு அந்தஸ்தில் மற்றும்/அல்லது ஆவணமின்றி உள்ளார்
- அந்த நபரின் ஆவணங்கள், பணம் அல்லது மற்ற உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டன
- அந்த நபர் நியாயமற்ற கடன் ஏற்பாட்டுத் திட்டத்தில் இணைந்துள்ளார்
- அந்த நபர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார், கட்டுப்படுத்தப்பட்டுள்ளார் மற்றும்/அல்லது கண்காணிப்பு அல்லது மேற்பார்வையில் உள்ளார்
- அந்த நபருடைய காலாசார அல்லது மத நம்பிக்கைகள் தந்திரமாகக் கையாளப்பட்டுள்ளன

கடத்தல்

மோசடி/ஏமாற்றுதல் (தவறான, துல்லியமற்ற, முழுமையற்ற அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்கள்) பின்வரும் தொடர்பானவை:
- அந்த நபரின் புலம்பெயர்வு செயல்பாடு மற்றும் வாய்ப்புகள் (இலக்கு உட்பட)
- அந்த நபரின் பயணம் மற்றும் ஆள்சேர்ப்பு சூழ்நிலைகள்
- அந்த நபரின் வேலை வகை, ஊதியம், வருமானம், சம்பளம் உட்பட பணி நிலைமைகள்
- அந்த நபரின் கல்வி வாய்ப்புகளைப் பெறுதல்
- அந்த நபரின் வீட்டுவசதி மற்றும் இடம் அல்லது வாழ்க்கை நிலைமைகள்
- அந்த நபரின் ஆவணங்கள், புலம்பெயர்வு அந்தஸ்து, வேலை அல்லது ஒப்பந்தம் இவைகளின் சட்டபூர்வத் தன்மை
- அந்த நபர் தொடர்பான சட்டங்கள், மனோபாவம் அல்லது அதிகாரிகளின் நடத்தை
- குடும்ப மறுஇணைப்பு, திருமணம் அல்லது தத்தெடுத்தல் தொடர்பாக அந்த நபரின் வாய்ப்புகள்

அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தல் அல்லது பலவீன நிலைமையைத் தவறாகப் பயன்படுத்தல்,[37] பின்வரும் துஷ்பிரயோகம் மூலமாக:
- அந்த நபரின் பொருளாதார, உளவியல் அல்லது உணர்வுபூர்வமாகச் சார்ந்திருத்தல் அல்லது சுரண்டுவோர்/முதலாளி/குடும்ப அங்கத்தினருடன் உறவு
- சுரண்டுவோர்/முதலாளி/குடும்ப அங்கத்தினருடன் அந்த நபரின் காதல் அல்லது உணர்வுபூர்வமான ஒட்டுதல்
- அந்த நபரின் புலம்பெயர்வு ஆவணங்கள் மற்றும்/அல்லது அந்தஸ்து
- அந்த நபரின் சமூக, கலாசார அல்லது மொழியல் வகையில் தனிமை
- அந்த நபரின் வேலையில்லாத் திண்டாட்டம் அல்லது பொருளாதாரரீதியில் வறுமை
- அந்த நபரின் உள்ளம் மற்றும் உடல் ஊனம்
- அந்த நபரின் வயது (இளம் அல்லது முதிய), இன வேறுபாடு. பாலினம், பாலியல் அமைப்பு, நாடு, இன அல்லது சமூகத் தோற்றம், உடல்ஊனம்

[39] மக்களைக் கடத்துதலின் பொருள்விளக்கத்திற்குள் பலவீனமான நிலையைச் சாதகமாக்கிக் கொள்ளல் மற்றும் பிற "வழிமுறைகள்", UNODC, 2012 மற்றும் நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் கூடுதலாக, மக்களை அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலை தடுக்க, ஒடுக்க மற்றும் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நெறிமுறை பற்றிய சட்டப்பிரிவு 3 மக்களைக் கடத்துதல் மூலமாகக் 'பலவீனமான நிலையைச் சாதகமாக்கிக் கொள்ளல்' பற்றிய வழிகாட்டல் குறிப்பு, UNODC, 2012-ஐப் பார்க்கவும்.

- அந்த நபரின் கலாசார அல்லது மத நம்பிக்கைகள், சடங்குகள் அல்லது நடைமுறைகள்
- அந்த நபரின் போதைப் பொருள் அல்லது மதுவைச் சார்ந்திருத்தல் அல்லது அவற்றுக்கு அடிமையாதல்

**மற்றொரு நபரின் கட்டுப்பாட்டில் ஒரு நபரின் சம்மதம் பெறுவதற்கு பணம் அல்லது சலுகைகள் கொடுக்கல் வாங்கல்:**

- அந்த நபர் மூன்றாம் நபர்களிடம் கட்டணம், வரதட்சணை கொடுத்தல் அல்லது பரிசு கொடுக்கல் வாங்கல் மூலம் ஒரு சூழ்நிலையில் இருத்தி வைக்கப்படுகிறார்.

## பாதிக்கப்பட்டதாகக் கருதப்பட்டவர் ஒரு வெளிநாட்டு மாநிலத்துக்குப் பயணம் செய்யும், நுழையும் அல்லது தங்கியிருக்கும் விதம்

ஒரு நபர் நாடுகடந்த ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர் என சந்தேகப்படும் சூழ்நிலைகளில், அவர் வெளிநாட்டு மாநிலத்துக்குப் பயணம் செய்யும், நுழையும் அல்லது தங்கியிருக்கும் விதமானது, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படுபவர் என்ற வகையில் அவரது நிலைமையை ஆழமாகப் புரியவைக்கும்:

- அந்த நபரின் பயண அல்லது அடையாள ஆவணங்கள் மூன்றாவது தரப்பால் எடுத்து வரப்படுகின்றன/வழங்கப்படுகின்றன
- ஆள்சேர்ப்பு மற்றும்/அல்லது பயண ஏஜென்சிகள் பதிவு செய்யப்படாதவை மற்றும்/அல்லது முறைப்படுத்தப்படாதவை மற்றும்/அல்லது தொழிலாளியிடம் கூடுதலான கட்டணம் வசூலிக்கின்றன
- நுழைவு விசா பொருத்தமானது அல்ல மற்றும்/அல்லது பயண நோக்கம் மற்ற தகவல்களுடன் ஒத்துப்போகவில்லை (எடுத்துக்காட்டாக, தங்கும் கால அளவுக்கு ஏற்ப போதிய பணம் இன்மை, பயணியின் உடல்நிலை, அல்லது பிரகடனப்படுத்திய தொழில்)
- அந்த நபரின் பயணப்பெட்டி பயணியரின் அறிக்கையுடன் ஒத்துப்போகவில்லை (எடுத்துக்காட்டாக, பயணப்பெட்டியின் தரம் மற்றும் வகை, நீண்டகாலம் தங்க உத்தேசித்திருப்பதற்கு சிறிய பை அல்லது சிறியகாலம் தங்க உத்தேசித்திருப்பதற்கு பெரிய பை)
- அந்த நபருக்கு யாரென்று தெரியாத து போல் தோன்றுகின்ற மற்றவர்கள் அடங்கிய ஒரு குழுவுடன் அவர் பயணம் செய்கிறார்
- அந்த நபரிடம் போலி அடையாளம், வேலை மற்றும்/அல்லது பயண ஆவணங்கள் உள்ளன மற்றும்/அல்லது பயணிகள் வழங்கிய தகவல்களில் நம்பகத்தன்மை இல்லை
- அந்த நபர் தனது பயணப் பாதை, இலக்கு அல்லது பயண நோக்கம் பற்றி குழப்பமடைந்து உள்ளார்
- அந்த நபர் முறையற்ற புலம்பெயர்வு/குடியுரிமை நிலைமையில் இருக்கிறார் (அடையாள அட்டைகள் பறிமுதல் அல்லது வேலையிலிருந்து நீக்கம் உட்பட)

## பாதிக்கப்பட்டவராகக் கருதப்படுவோரின் உடல் நிலை

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் கடத்தப்படும் சமயத்தில் மனத்தளவிலும், உடலளவிலும் கடுமையான பாதிப்புக்குள்ளாகிறார்கள். அப்படி எதிர்கொள்ளும்போது, ஒரு நபரின் உடல்நிலை அவர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவராய் இருக்கக்கூடுமா என்பதை ஆழமாகப் புரியவைக்க முடியும். இருப்பினும், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் தங்களை பாதிக்கப்பட்டவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ள மாட்டார்கள் மற்றும் தங்களுடைய நிலைமையில் திருப்தியடைந்ததுபோல காணப்படலாம் என்பதைக் குறிப்பிடுவது முக்கியமாகும்.[38] ஒரு சூழ்நிலையில் தனது திருப்தியை ஒரு நபர் வலியுறுத்திக் கூறுதலே எவ்வாறு ஆள்கடத்தல்காரர் திறம்பட அவரைக் கையாண்டிருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது.

**உளவியல் நிலை மற்றும் நடத்தை அடையாளங்கள்:**

- அந்த நபர் ஆர்வத்துடனும், மன அழுத்தத்துடனும், அடக்கத்துடனும், பயத்துடனும், பதற்றத்துடனும், கூச்சத்துடனும், நிலையற்ற மனத்துடனும் தோன்றுகிறார்
- அந்த நபர் கண்களால் நேருக்கு நேர் பார்க்க மறுக்கிறார்
- அந்த நபர் காயங்களைப் பற்றிப் பேச அல்லது விவாதிக்கத் தயங்குகிறார்

**மோசமாக நடத்தப்படுதலுக்கான மற்றும்/அல்லது புறக்கணிப்புக்கான உடல் அடையாளங்கள்:**

- அந்த நபரிடம் உடல்ரீதியான வன்முறையின் அடையாளங்கள் தென்படுகின்றன
- அந்த நபரிடம் போதைப்பொருளுக்கு அல்லது மதுவுக்கு அடிமை/சார்புநிலை/பழக்கம் ஆன அடையாளங்கள் தென்படுகின்றன
- அந்த நபரிடம் உணவு, தண்ணீர், தூக்கம், மருத்துவப் பராமரிப்பு அல்லது மற்ற வாழ்க்கைத் தேவைகளின் இழப்பு காரணமாக ஊட்டச்சத்துக் குறைவு அல்லது மற்ற உடல்நிலைகளுக்கான அடையாளங்கள் தென்படுகின்றன
- அந்த நபரிடம் சலவை மற்றும்/அல்லது துப்புரவு வசதிகள் கிடைக்கக்கூடிய வசதிகள் இல்லாததால், ஆரோக்கியக் குறைவுக்கான அடையாளங்கள் தென்படுகின்றன

[38] பிரிவு 2.2-ஐப் பார்க்கவும்.

## பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுபவர் காணப்படுகின்ற வாழுமிடம் மற்றும்/அல்லது வேலை செய்யுமிடத்தின் நிலைமைகள்

வாழுமிடம் மற்றும்/அல்லது வேலை செய்யுமிடத்தின் நிலைமைகள் சம்பந்தப்பட்ட குறிகாட்டிகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைச் சுரண்டுவது தொடர்பானவை. பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுபவர் பல்வேறு வகையான தொழிற்சாலைகளிலும், பாலியல் தொழில் உள்ளிட்ட சூழல்களிலும், அத்துடன் வீட்டுவேலை, குழந்தை பராமரிப்பு, சுகாதாரச் சேவைகள், முதியோர் பராமரிப்பு, விளையாட்டு, பொழுதுபோக்கு, உபசரிப்பு, கட்டுமானம், காடுகள், மீன்பிடிப்பு, சுரங்கம், விவசாயம் மற்றம் ஜவுளித் தொழிற்சாலைகளிலும் காணலாம். பின்வரும் குறிகாட்டிகள் எல்லாச் சூழல்களுக்கும் பொருந்தும். அதில் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுபவர் வாழ்ந்து கொண்டிருப்பதாக மற்றும்/அல்லது வேலை செய்து கொண்டிருப்பதாகக் காணப்படலாம்.

ஊதியம் மற்றும் ஒப்பந்தங்கள்:

- அந்த நபர் வருமானத்தையும் மற்றும் சேமிப்புகளையும் தன்னிடத்தே வைத்துக்கொள்வதற்கும் மற்றும்/அல்லது பணமாற்றம் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது
- அந்த நபர் அவருடைய வேலைக்காக சிறிதளவே ஊதியம் பெறுகிறார் அல்லது ஊதியம் பெறுவதில்லை அல்லது ஊதியம் தாமதிக்கப்படுகிறது
- அந்த நபருக்கு வாக்களித்தபடிக்கும் கீழ் அல்லது தேசிய குறைந்தபட்ச ஊதியத்துக்கும் குறைவாகவே தரப்படுகிறது
- அந்த நபரின் சம்பளத்திலிருந்து முதலாளி/ஆள்சேர்ப்பு ஏஜென்டுகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் உட்பட அதிகப்படியான பிடித்தங்கள் செய்யப்படுகின்றன
- அந்த நபருக்கு சட்டபூர்வமாகச் சேரவேண்டிய சலுகைகள் மற்றும் சமூகப் பாதுகாப்புகள் மறுக்கப்படுகின்றன
- அந்த நபர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை அல்லது ஒப்பந்த விதிமுறைகள் மதிக்கப்படவில்லை
- அந்த நபர் மாநிலத்துக்கு வந்திறங்கியபின் மற்றும்/அல்லது வேலை ஆரம்பிக்கும்போது ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைக்கப்பட்டுள்ளார்
- வேலை கொடுப்பவர் ஊதியப் பட்டுவாடாவுக்கான சான்றுகளைத் தொழிலாளர்களுக்குக் காட்டமுடியவில்லை
- அந்த நபர் காரணம், முன்னறிவிப்பு மற்றும்/அல்லது சலுகைகள் எதுவுமின்றி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்

வேலைத்தல சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு:

- அந்த நபருக்கு தகுந்த பாதுகாப்பு மற்றும் பிற காப்பீட்டுக் கருவி மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவில்லை, அல்லது கருவி மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்குக் கற்றுத்தரவில்லை
- அந்த நபர் மருத்துவப் பராமரிப்பு பெறுவது மறுக்கப்பட்டது
- அந்த நபர் நீண்ட/அசாதாரண நேரங்களில் நீண்டநேரம் வேலை செய்கிறார்
- அந்த நபருக்கு சிறிதளவே ஓய்வு நேரம் உள்ளது அல்லது ஓய்வு நேரமே கிடையாது
- அந்த நபர் இலக்கை நிறைவேற்றத் தவறினால் தண்டனைகள்/அபராதத்துக்கு உள்ளாக நேரிடுகிறது

நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடுகள் மற்றும் தரம் குறைந்த வசதிமுறைகள்:

- அந்த நபருக்கு உடல்ரீதியான கட்டுப்பாடு அல்லது வேலை அல்லது மற்ற இடங்களில் அடைத்து வைக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன (எ.கா. மூடப்பட்ட/கம்பிகள் பொருத்தப்பட்ட சன்னல்கள், கதவுகள் வெளிப்பக்கமாக பூட்டப்படுதல், முள்கம்பி வேலி, பாதுகாப்பு புகைப்படக் கருவிகள்)
- அந்த நபர் வேலை பார்க்கும் இடத்தில் உறங்குகிறார்
- அந்த நபருக்கு தொலைத்தொடர்பு கொள்வதற்கான வழிமுறைகள் மறுக்கப்பட்டுள்ளன
- அந்த நபர் தன்னுடைய பயண/அடையாள ஆவணங்களை வைத்திருக்கவில்லை, மற்றும்/அல்லது அவருடைய முதலாளி அல்லது மற்றவரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. [39]

[39] மேலதிக விவரங்களுக்கும், குறிகாட்டிகளின் மூலாதாரங்களுக்கும் ஆதார வளங்களின் மேட்ரிக்ஸைப் பார்க்கவும்.

# பிரிவு 4:

## ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பது பற்றிய உதவிக்குறிப்புகளின் தொகுப்பு

- ✓ ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கருதப்பட்டவர்களை பாதிக்கப்பட்டவர்கள் என நடத்துவதற்குச் சாதகமான அனுமானத்தை அறிமுகம் செய்தல்: ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர் என அதிகாரிகள் சந்தேகப்படும் நபரை, ஆரம்ப உதவி மற்றும் பாதுகாப்பை வழங்கும் நோக்கத்துக்காக, அவர் பாதிக்கப்பட்டவர் என்று அனுமானத்தின் பேரில் நடத்துவதற்கு, அதிகாரிகளுக்கு பாதிக்கப் பட்டவர்களை அடையாளம் காணும் மாநிலக் கொள்கைகள் அனுமதிக்க வேண்டும்.

- ✓ மனிதக்கடத்தல் தொடர்பான குற்றங்களில் விழிப்புணர்வை உண்டாக்குதல்: மற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்ட நபர்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்படாதவர்களாக இருக்கலாம் மற்றும் உதவி மற்றும் பாதுகாப்புக்குத் தேவை இருக்கலாம். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுவதற்குப் பொறுப்பான தொழில்புரிபவர்கள் தொடர்பான குற்றவகைகளை அறிந்திருக்க வேண்டும், அதனால் அதற்கேற்ப எதிர்கொள்ளும் திறமை பெற்றிருக்க வேண்டும்.

- ✓ பாதிப்புக்கு ஆளாகக்கூடிய குழுக்களின் மத்தியில் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படுபவர்களை அடையாளம் காணுதல்: சுரண்டல் கட்டத்துக்கு முன்பு, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் மிகவும் கடினமானதாகும். பாதிப்புக்கு ஆளாகக்கூடியவர்களின் மத்தியில் கடத்தப்பட்ட புலம்பெயர்ந்தோர் உட்ளிட்ட ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படுபவர்களை அடையாளம் காண, அதிகாரிகளுக்கு ஆதரவு தரும்வகையில் தடுப்பு ஏற்பாடுகள் அடங்கியுள்ளன என்பதை மாநிலங்கள் தங்கள் கொள்கை விளக்கங்களில் உறுதி செய்யவேண்டும்.

- ✓ அடிமைத்தனத்தை அடையாளம் காணுதல்: அடிமைத்தனமானது சூழ்நிலையினால் உருவாகும் நிலைமையைக் காட்டிலும், குற்றம் புரிந்தவர் மற்றும் அவரால் பாதிக்கப்பட்டவருக்கிடையே ஏற்பட்டுள்ள உறவால் குறிக்கப்படுகிறது. அடிமைத்தனத்துக்கு ஆளான நிலைமையில் உள்ள ஒரு நபர் வசதியாய் வாழ முடியும் எனக் கருதப்பட்டாலும், அடிப்படையான சொந்த முடிவுகளை அவரால் எடுக்க முடியாது என்பதை அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

- ✓ கடன் ஒப்பந்தத்தை அடையாளம் காணுதல்: கடன் ஒப்பந்தம் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட பலருக்கு ஒரு பொதுவான அனுபவமாகும். கடன் ஒப்பந்தத்துக்கான சூழ்நிலையை, உறுதி செய்ய முடியாத அளவுக்கு, அத்துடன் எந்த அளவுக்கு வேலை அல்லது சேவை செய்தாலும் வெளியேறமுடியாத அளவுக்குக் கடன் இருப்பது மூலம் அடையாளம் காணலாம். பல அதிகார எல்லைகள் கடன் ஒப்பந்தத்தை மிக விரிவாகப் புரிந்து வைத்துள்ளன. ஏனென்றால் கடனைத் திருப்பித் தருவதற்கு உழைப்பு அல்லது சேவைகளை வழங்கும் சூழ்நிலைகள் சுரண்டல் தன்மையுடையவை.

- ✓ கட்டாயத்திருமணத்தை அடையாளம் காணுதல்: பெண்களின் கட்டாயத்திருமணத்தை மட்டுமே அடையாளம் காணும் அடிமைத்தனம் பற்றிய கூடுதல் ஒப்பந்தம் அமலுக்கு வந்தது முதல், நடைமுறையில், சிறுவர்கள் மற்றும் ஆண்களும் திருமணத்துக்குப் பலவந்தப் படுத்தப்படக்கூடும் என்று பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கட்டாயத் திருமணத்தை அதன் எல்லா வகைகளிலும் எதிர்த்துப் போராடுவதற்கு, கட்டாயத் திருமணத்தைத் தடைசெய்யும் சட்டம், சம்பந்தப்பட்டவர்களின் பாலினத்தைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் சமமாகப் பொருந்துவதை உறுதி செய்யும் வகையில் மாநிலங்களின் நடைமுறையைப் பின்பற்றுவது பயனுள்ளதாகும். கருதப்படுவது நல்ல நடைமுறையாகும்.

✓ வெவ்வேறு வகையான சுரண்டலுக்குக் குறிப்பிட்ட குறிகாட்டிகளை வைத்தல்: வெவ்வேறு வகையான சுரண்டலை அங்கீகரிக்க அதிகாரிகளுக்கு அனுமதி கொடுக்கப் போதுமான அளவு விவரமாகவும், திட்டவட்டமாகவும் சொல்லும் குறிகாட்டிகளை, அதில் பயிற்சி பெற்ற முதலில் பதிலளிப்பவர்களுக்கு வழங்க மாநிலங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். உதவியும், பாதுகாப்பும் வழங்கப்படும்போது, பொருள்விளக்கத்தின் மற்ற உறுப்புகளின் கூடுதல் ஆதாரங்கள் வெளிப்படையாகத் தெரியலாம். பிரிவு 3.3 திட்டவட்டமான மற்றும் விவரமான குறிகாட்டிகளுக்கான அடிப்படையை வழங்குகிறது.

✓ தடுப்புக்காவல் மற்றும் நாடுகடத்தல் பற்றிய பாதிக்கப்பட்டவர்களின் கவலைகளைத் தீர்க்க முன்வருமாறு அவர்களை ஊக்குவித்தல்: பாதிக்கப்பட்டவர்கள் காவலில் வைக்கப்படுவதைப் பற்றிக் கொண்டிருக்கும் கவலைகளைத் தீர்க்க குடிவரவுக் குற்றங்கள் உட்பட , கடத்தப்பட்டதன் விளைவாக அவர்கள் புரிந்த குற்றங்கள் சட்டவிரோதமில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகள் இருக்கவேண்டும். பாதிக்கப்படவர்களின் நாடுகடத்தல் பயங்களைத் தீர்க்க, ஆள்கடத்தலால் பரதிக்கப்பட்டவர்கள், பாதுகாப்பும் உதவியும் பெற, சென்றடைந்த நாட்டில் தங்கியிருக்க அனுமதியளிக்கும் வகையில் விசா பாதைகள் இருக்கவேண்டும்.

✓ பாதிக்கப்பட்டவர்களையும், அவர்களது குடும்பத்தையும் பாதுகாக்க முன்வருமாறு அவர்களை ஊக்குவித்தல்: பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் அவர்கள் குடும்பங்களின் பயனுள்ள பாதுகாப்புக்கு உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை வைத்திருக்குமாறு மாநிலங்கள் பரிசீலிக்க வேண்டும். பாதுகாப்பு தேவைப்படும் நபர்கள் வேறு மாநிலங்களில் இருந்தால், அந்த மாநிலங்களில் உள்ள குற்றவியல் நீதி தொழில்புரிவோரின் ஒத்துழைப்பை நாட வேண்டும் அல்லது தேவைப்பட்டால், தீங்கு அபாயம் உள்ள நபர்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்க விசா மற்றும் குடிவரவு பாதைகள் கிடைக்கப்பெற வேண்டும்.

✓ பாதிக்கப்பட்டவர்களை அவதூறுக்கு உள்ளாவதில் இருந்து பாதுகாக்க முன்வருமாறு அவர்களை ஊக்குவித்தல்: பாதிக்கப்பட்டவர்களின் தகவல்களின் இரகசியத்தை உறுதியாகக் காப்பாற்றுவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் அவமான உணர்வுகள் அல்லது அவதூறு பற்றிய பயங்களை உதவி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அகற்றுகின்றனவா என்பதையும், மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்குவதில் ஆதங்கங்களைப் புரிந்து, தீர்த்து வைக்க அரசு சாரா அமைப்புகள் (NGOs), சமுதாயங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுடனும் வேலை செய்வதன் மூலமும், மாநிலங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

✓ பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுவதை மேம்படுத்த, பொதுமக்களிடத்தில் மனிதக்கடத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்: மனிதக்கடத்தல் நடக்கும் சூழ்நிலையில் பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பிரச்சாரங்களை, மாநிலங்கள் முன்னெடுத்து, அவற்றுக்கு ஆதரவளிக்க வேண்டும். இத்தகைய பிரச்சாரங்களை இலக்குப் பார்வையாளர்களுக்கு பின்வரும் வகையில் விளக்கினால் மிகவும் நல்லது: அ) மனிதக்கடத்தல் என்றால் என்ன மற்றும் அது எப்படியிருக்கக்கூடும், மற்றும் ஆ) முக்கியச் செய்திகளில் உள்ள விவரங்கள் உட்பட தனிநபர்கள் எடுக்கக்கூடிய குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரைக்கப்படும் முக்கியத் தகவல்களை வழங்குவது.

✓ அடையாளம் காண்பதில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு பங்குதாரர்களின் திறனை வலுப்படுத்துதல்: பயனுள்ள, அடையாளம் காணல் செயல்முறைகளில் மாநில அதிகாரிகள் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகளின் பெரும் சேர்மத்தின் பங்குகள் மற்றும் பொறுப்புகளை விளக்க, தெளிவான வழிகாட்டுதல்கள் மற்றும் செயல்முறைகளை அறிமுகப்படுத்துதல்

✓ ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்பு கொள்ளக்கூடிய நபர்களுக்கு அடையாளப் பயிற்சி வழங்குதல்: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டோரை அடையாளம் காண்பதில் ஈடுபடும் முன்னணி அதிகாரிகளுக்கு முன்னுரிமை கொடுப்பது அவசியமாகும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய ஆசிரியர்கள், பத்திரிக்கையாளர்கள், மருத்துவ நிபுணர்கள், தனியார் துறை செயல்திறனாளர்கள் மற்றும் பிற சமூகத்திலுள்ளோர் பாதிக்கப்பட்டோரை அடையாளம் காணுவதில் ஒரு பங்கு வகிக்க அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுவதற்கும், குறிகாட்டிகளைக் வழங்கவும் பரிசீலிக்க வேண்டும்.

✓ ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அடையாளம் காணுதலை வலுப்படுத்துதல்: ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் உள்ள குழந்தைகளுக்கு துரித அடையாளம் காண செயல்படுத்தப்படும் நடைமுறைகள் மற்றும் சிறப்பு குழந்தை சேவை வழங்குவோருக்கு அடையாள நடைமுறைகள் மூலம் உடனடியாகத் தெரிவித்தல் போன்றவை பின்வரும் இரு காரியங்களை அளிக்கின்றன:

- சிறுபான்மை என்ற அனுமானம், மற்றும்
- பாதிக்கப்பட்ட நிலை என்ற அனுமானம்.

✓ பாதிக்கப்பட்டோர் நுண்ணுணர்வை மதிக்கும் நேர்காணல் உத்தியைப் பயன்படுத்த ஆதரவளித்தல்: மொழி, பாலினம், வயது மற்றம் கலாசாரக் காரணங்களைத் கருத்தில் கொள்ளத் தேவையான திறன்களை நேர்காணலை நடத்தும் நபர்கள் கொண்டிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தவும். முடிந்தவரை, பேட்டி கொடுக்கும் தனிநபரைக் கலந்தாலோசனை செய்து, அவரது விருப்பங்களைக் கேட்டு, அத்தகைய விருப்பங்கள் எந்த அளவுக்கு பொருத்தமானதோ அந்த அளவுக்கு இடமளிக்கவும்..

✓ புகலிடம் கோருவோரின் உரிய பரிந்துரையை அடையாளம் காணும் செயல்முறைகள் அனுமதிக்க உறுதிசெய்தல்: மாநிலங்கள் அடையாளத்துக்காக, ஒரு நபர் புகலிடம் கோரி விண்ணப்பித்திருந்த அல்லது ஒரு அகதி என்று நம்பப்படுவதற்கான காரணம் உள்ள வம்சாவளி நாட்டின் இராஜாங்க பிரதிநிதிகளிடம் தொடர்பு கொள்ளக்கூடாது.

✓ சீர்தூக்கும் குறிகாட்டிகளைக் கருத்தில் கொள்ளல்: சில வகையான தகவல்களுக்கு முன்னுரிமை அளிக்க, பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதில் யார் பொறுப்பானவர்களோ அவர்களுக்கு உதவும் பொருட்டு சீர்தூக்கும் குறிகாட்டிகளை மாநிலங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட அணுகுமுறையானது ஒவ்வொரு குறிகாட்டியையும் வலுவானது, நடுத்தரமானது அல்லது பலவீனமானது எனப் பிரித்துத் தகுதிச்சான்றளிக்கிறது. அதில் ஒரே குறிகாட்டி குழந்தைகளுக்கு பலமானதாகவும், வயது வந்தோர்க்கு நடுத்தரமானதாகவும் அல்லது பாலியல் சுரண்டலுக்கு வலுவானதாகவும் மற்றும் உழைப்பு சுரண்டலுக்கு பலவீனமானதாகவும் விதிமுறை வகுக்கிறது.

✓ சூழலுக்கேற்றவகையில்குறிகாட்டிகளைமாற்றியமைத்தல்:அதிகாரிகள்தங்களுடைய வேலையின்போது எதிர்கொள்ளும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அவர்கள் தங்களை மாற்றிக்கொள்ள, குறிகாட்டிகளின் பட்டியல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மாறுகின்ற ஆள்கடத்தல் போக்குகளுக்கு தொடர்ந்து உகந்ததாய் இருக்கிறதா என்பதை உறுதி செய்யும்வகையில் மாநிலங்கள் குறிகாட்டிகளைத் அடிக்கடி புதிப்பிக்க வேண்டும்.




Regional Support Office
The Bali Process

தொடர்பு கொள்ள
வட்டார ஆதரவு அலுவலகம் – பாலி செயல்முறை
27-ஆவது மாடி ராஜநகர்ன் கட்டிடம்
3 தெற்கு சதோர்ன் சாலை, சதோர்ன் பாங்காக் 10120
தாய்லாந்து தொலைபேசி +66 2 343 9477
தொலைநகல் +66 2 676 7337
info@rso.baliprocess.net




http://www.baliprocess.net